சுற்றுலா, பண்பாடு மற்றும்
அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

## மானியக் கோரிக்கை எண். 29


**மு.பெ. சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2024

# அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
| --- | --- | --- |
| | I – கலை பண்பாட்டுத் துறை | |
| 1 | முன்னுரை | 1–2 |
| 1.1 | கலை பண்பாட்டு இயக்ககம் | 3–4 |
| 1.2 | துறையின் நோக்கங்கள் | 5 |
| 1.3 | மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் | 6–11 |
| 1.4 | மாவட்டக் கலை மன்றங்கள் | 11–13 |
| 1.5<br>1.5.1 | கலைக் கல்வி<br>அரசு இசைக் கல்லூரி, சென்னை | 13–15 |
| 1.5.2 | அரசு இசைக் கல்லூரி, மதுரை | 15–16 |
| 1.5.3 | அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர் | 16–17 |
| 1.5.4 | அரசு இசைக் கல்லூரி, திருவையாறு | 17–19 |
| 1.5.5 | அரசு இசைப்பள்ளிகள் | 19–21 |
| 1.5.6 | அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை | 22–24 |

| | | |
|---|---|---|
| 1.5.7 | அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம் | 24–26 |
| 1.5.8 | அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம் | 26–27 |
| 1.5.9 | கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி | 28 |
| 1.6 | தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் | 29–36 |
| 1.7 | தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம் | 36–37 |
| 1.7.1 | ஜவகர் சிறுவர் மன்றங்களில் பகுதிநேரப் பயிற்சிகள் | 38 |
| 1.7.2 | பயிற்சி திட்டங்கள் மாவட்ட அளவிலான கோடைக்காலக் கலைப் பயிற்சி முகாம் | 38 |
| 1.7.3 | மாநில அளவிலான கோடைக் கால மற்றும் குளிர்காலப் பயிற்சி முகாம்கள் | 39 |
| 1.7.4 | மாநில அளவிலான கைவினை கலைப் பயிற்சி முகாம் | 39–40 |
| 1.7.5 | மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள் | 40–41 |


::

| | | |
|---|---|---|
| 1.7.6 | தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு | 41–42 |
| 1.8<br>1.8.1 | ஓவிய நுண்கலைக்குழு<br>கலைச்செம்மல் விருதுகள் | 42–43 |
| 1.8.2 | மாநில அளவில் மரபுவழி, நவீனபாணி பிரிவுகளில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி மற்றும் பரிசுத் தொகை | 43–45 |
| 1.8.3 | தனி நபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக் காட்சி (Group Show) நடத்திட கவின் கலைஞர்களுக்கு நிதியுதவி | 45–46 |
| 1.8.4 | கவின் கலை பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை | 47–48 |
| 1.9 | தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 48–49 |
| 1.10 | சங்கமம் "நம்ம ஊரு திருவிழா" | 49–50 |
| 1.11 | பகுதி நேர கலைப்பயிற்சிகள் | 50–51 |
| 1.12 | கலைஞர் நூற்றாண்டு விழா | 51–53 |

| | | |
|---|---|---|
| 1.13 | அயல் நாடுகள் / மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகள் | 54–55 |
| 1.14 | சிறப்பு கலை நிகழ்ச்சிகள் | 55–56 |
| 1.15 | தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் | 57–61 |
| 1.16 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 61–68 |
| 1.17 | முடிவுரை | 68–69 |
| | இணைப்புகள் | 70–94 |
| | நிழற்படங்கள் | 95–123 |
| | II – அருங்காட்சியகங்கள் துறை | |
| 2 | முன்னுரை | 125–127 |
| 2.1 | அருங்காட்சியகங்களின் நோக்கங்கள் | 128–129 |
| 2.2 | நிருவாகக் கட்டமைப்பு | 129–130 |
| 2.3 | சென்னை அரசு அருங்காட்சியகம் | 131–145 |
| 2.3.1 | சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்றுவரும் மேம்பாட்டுப் பணிகள் | 145–148 |

| | | |
|---|---|---|
| 2.3.2 | சுதந்திர தின அருங்காட்சியகம் | 148–149 |
| 2.4 | மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் | 149–161 |
| 2.5 | வெளியீடுகள் | 161 |
| 2.6 | அருங்காட்சியக சேகரிப்புகள் | 162 |
| 2.6.1 | 2023–2024 ஆம் ஆண்டு சென்னை அரசு அருங்காட்சியக சேகரிப்புகள் | 162–164 |
| 2.6.2 | 2023–2024 ஆம் ஆண்டு மாவட்ட அரசு அருங்காட்சியக சேகரிப்புகள் | 164–167 |
| 2.6.3 | சென்னையில் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட அரும்பொருட்கள் | 167–168 |
| 2.6.4 | மாவட்டங்களில் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட அரும்பொருட்கள் | 168–170 |
| 2.7 | கல்விப் பணிகள் | 170–171 |
| 2.7.1 | சென்னையில் கல்விப் பணிகள் மற்றும் கண்காட்சிகள் | 171–173 |

| | | |
|---|---|---|
| 2.7.2 | மாவட்ட அருங்காட்சியகங்களில் கல்விப் பணிகள் | 174–176 |
| 2.7.3 | மாவட்ட அருங்காட்சியகங்களில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகள் | 177–179 |
| 2.8 | நிறைவுரை | 180 |
| | நிழற்படங்கள் | 181–235 |

# கலை பண்பாட்டுத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2024 – 2025

## 1. முன்னுரை


பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கலைகள் மற்றும் சமூக நடத்தைகளை உள்ளடக்கியது. இதுவே சமூகங்களை ஒன்றிணைத்து அவற்றின் தனித்துவமான அடையாளங்களை வெளிப்படுத்தும் சக்தியாகும். பண்பாடானது படைப்பாற்றல், புதுமை, சமூக வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் கருத்து பரிமாற்றங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பல நூற்றாண்டுகளாக நீளும் வரலாற்றில் துடிப்பான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட கலை மற்றும் பண்பாட்டின் தாயகம் தமிழ்நாடு.

தமிழ்நாட்டின் செவ்வியல் மரபுகள் உலகப் புகழ் பெற்றவை. தமிழ் நாட்டுப்புறக் கலைகள் தமிழ்நாட்டின் பாரம்பரியங்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பண்பாட்டு வெளிப்பாடுகளான இசை மற்றும் நடனங்களை உள்ளடக்கியவை. நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகள் மற்றும் உயர்ந்தோங்கிய கோபுரங்களைக் கொண்ட மாபெரும் திராவிட பாணி ஆலயங்களைக் கொண்டது இந்த மாநிலம். தஞ்சாவூர் ஓவியங்கள், சோழர்கால வெண்கலச் சிற்பங்கள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் போன்ற பாரம்பரிய கைவினைப் பொருட்களுக்காக புகழ்பெற்றது தமிழ்நாடு. விருந்தோம்பல், நீதியுணர்வு மற்றும் ஒருங்கிணைப்புத்தன்மை ஆகியவற்றின் வசீகரிக்கும் கலவையான தமிழ்ப் பண்பாடு அதன் அனைத்து சிறப்புகளுடன் பல தலைமுறைகளாகப் போற்றப்படுகிறது.

## 1.1 கலை பண்பாட்டு இயக்ககம்

கலை பண்பாட்டு இயக்ககம் 1991 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. இணை இயக்குநர், துணை இயக்குநர்கள், மண்டல உதவி இயக்குநர்கள், கணக்கு அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் இயக்குநருக்கு உதவியாக செயல்பட்டு வருகின்றனர். இத்துறை, ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், அரசு கவின் கலைக் கல்லூரிகள் இரண்டு, அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி ஒன்று, அரசு இசைக் கல்லூரிகள் நான்கு, அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஒன்று, மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் பதினேழு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் மற்றும் தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றங்கள் அறுபது ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்கிறது.


துறையின் படிநிலை (Hierarchy)
கலை பண்பாட்டுத் துறை
மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்
1. காஞ்சிபுரம்
2. சேலம்
3. தஞ்சாவூர்
4. மதுரை
5. திருநெல்வேலி
6. திருச்சி
7. கோயம்புத்தூர்
மாவட்ட கலை மன்றங்கள்
தமிழகத்தின் 37 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் செயல்படுகிறது (மயிலாடுதுறை நீங்கலாக)
கலைக் கல்வி நிறுவனங்கள்
தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகம்
இசைக் கல்லூரிகள்
1. சென்னை
2. மதுரை
3. கோயம்புத்தூர்
4. திருவையாறு அரசு இசைக் கல்லூரி
5. கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி
1. சென்னை
2. மதுரை
3. கோயம்புத்தூர்
கவின் கலைக் கல்வி நிறுவனங்கள்
1. அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.
2. அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்.
3. அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்.
மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்
1. திருச்சி
2. திருநெல்வேலி
3. திருவாரூர்
4. சேலம்
5. புதுக்கோட்டை
6. விழுப்புரம்
7. கடலூர்
8. பெரம்பலூர்
9. தூத்துக்குடி
10. கரூர்
11. காஞ்சிபுரம்
12. திருவண்ணாமலை
13. சிவகங்கை
15. சீர்காழி
16. இராமநாதபுரம்
17. ஈரோடு
கலை நிறுவனங்கள்
1. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.
2. தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்.
நலவாரியம்
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்

## 1.2 துறையின் நோக்கங்கள்

கலை பண்பாட்டுத் துறையின் நோக்கங்கள்:–

- கலை நிகழ்ச்சி வாயிலாக பல்வேறு கலை வடிவங்களை காட்சிப்படுத்துதல்.
- செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கி ஊக்குவித்தல்.
- கலைஞர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.
- நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- நிகழ்த்துக்கலைகள் மற்றும் கவின் கலைக் கல்வியை ஊக்குவித்தல்.
- பல்வேறு கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.
- கண்காட்சிகள் நடத்துதல் மற்றும்
- சிறந்த சிற்பிகள், ஓவியர்கள், செவ்வியல் மற்றும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல்.

## 1.3 மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்

மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கிடவும், தமிழ்நாட்டின் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளை முன்னிலைப்படுத்திடவும் மற்றும் அனைத்து பண்பாட்டு பாரம்பரியங்களுக்கு புத்துணர்வு அளித்திடவும், மாவட்டக் கலை மன்றங்கள் மற்றும் இதர கலை அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் ஏழு இடங்களில் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

இம்மண்டல அலுவலகங்கள் வாயிலாக கலை விழாக்கள், கலைப்போட்டிகள், கலைப் பயிற்சி முகாம்கள், மாவட்ட அளவிலான கலை விருதுகள் மற்றும் ஓவிய–சிற்பக் கலைக்காட்சிகள் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்டக் கலை மன்றங்கள், மாவட்ட அரசு இசைப்பள்ளிகள், ஜவகர் சிறுவர் மன்றங்கள் மற்றும் தமிழ்நாடு

நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றின் நிருவாகம் மற்றும் திட்டப் பணிகளை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மேற்கொண்டு வருகின்றன.

| வ. எண் | மண்டலக் கலை பண்பாட்டு மையம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, சென்னை, திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர். |
| 2 | சேலம் | சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி. |
| 3 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை. |

| | | |
|---|---|---|
| 4 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி, கரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மற்றும் அரியலூர். |
| 5 | மதுரை | மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் மற்றும் தேனி. |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தென்காசி. |
| 7 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர். |

கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் மாவட்டங்களில் தனித்தும், அந்தந்த மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை, செய்தித்துறை மற்றும் தென்னகப் பண்பாட்டு மையம் ஆகியவற்றுடன் இணைந்தும் கீழ்க்காணும் கலை விழாக்களில் மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக கலை நிகழ்ச்சிகள் வழங்கப்படுகிறது.

| வ. எண் | மண்டலத்தின் பெயர் மற்றும் கலை விழாக்கள் | |
|---|---|---|
| 1 | **காஞ்சிபுரம் மண்டலம்** | |
| | கார்த்திகை தீபம் | திருவண்ணாமலை மாவட்டம் |
| | ஆடிக்கிருத்திகை | திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம் |
| | மகாசிவராத்திரி | காஞ்சிபுரம் மாவட்டம் |
| | கோடை விழா | ஏலகிரி, திருப்பத்தூர் மாவட்டம் |
| | | ஜவ்வாது மலை, திருவண்ணாமலை மாவட்டம் |
| 2 | **சேலம் மண்டலம்** | |
| | கோடை விழா | ஏற்காடு, சேலம் மாவட்டம் |
| | ஆடிப்பெருக்கு விழா | ஒகேனக்கல், தருமபுரி மாவட்டம் |
| | மாங்கனி விழா | கிருஷ்ணகிரி மாவட்டம் |
| | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 3 | **தஞ்சாவூர் மண்டலம்** | |
| | சீர்காழி தமிழிசை மூவர் விழா | மயிலாடுதுறை மாவட்டம் |
| | இராஜராஜசோழன் சதய விழா | தஞ்சாவூர் மாவட்டம் |
| | ஆழித்தேர் விழா | திருவாரூர் மாவட்டம் |
| 4 | **திருச்சிராப்பள்ளி மண்டலம்** | |
| | வைகுண்ட ஏகாதசி விழா | திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| | அருள்மிகு நந்திதேவர் திருக்கல்யாண விழா | திருமழப்பாடி, அரியலூர் மாவட்டம் |
| | திருநெடுங்குடி மகாசிவராத்திரி விழா | புதுக்கோட்டை மாவட்டம் |
| 5 | **மதுரை மண்டலம்** | |
| | கோடை விழா | கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம் |
| | சித்திரைத் திருவிழா | மதுரை மாவட்டம் |
| 6 | **திருநெல்வேலி மண்டலம்** | |
| | பாவை விழா | ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் |
| | சாரல் விழா | குற்றாலம், தென்காசி மாவட்டம் |
| | அருவித் திருவிழா | திற்பரப்பு, கன்னியாகுமரி மாவட்டம் |
| | குமரித் திருவிழா | கன்னியாகுமரி மாவட்டம் |

| | | |
|---|---|---|
| 7 | **கோயம்புத்தூர் மண்டலம்** | |
| | தீரன் சின்னமலை விழா | ஈரோடு மாவட்டம் |
| | கோடை விழா | உதகை,<br>நீலகிரி மாவட்டம் |
| | | வால்பாறை,<br>கோயம்புத்தூர் மாவட்டம் |

## 1.4 மாவட்டக் கலை மன்றங்கள்

மாவட்டங்களில் கலைகளை அடையாளம் கண்டு உதவவும், தொன்மையான தமிழ்க் கலைகளை பேணிப்பாதுகாத்து மேம்படுத்திடவும், கலைத் திறமையுள்ள கலைஞர்களைக் கண்டறிந்து மாவட்ட அளவில் விருதுகள் வழங்கிடவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் கலை மன்றங்கள் 1994 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைத்துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு பின்வரும் வயது பிரிவுகளில் ஒவ்வொரு வயது பிரிவிற்கும்

3 விருதுகள் வீதம் 15 கலைஞர்களுக்கு மாவட்டக்கலை விருதுகள் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | வயதுப் பிரிவு | விருதின் பெயர் | விருதுத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | 18 வயது வரை | கலை இளமணி | 4,000/- |
| 2 | 19 முதல் 35 வயது வரை | கலை வளர்மணி | 6,000/- |
| 3 | 36 முதல் 50 வயது வரை | கலைச் சுடர்மணி | 10,000/- |
| 4 | 51 முதல் 65 வயது வரை | கலை நன்மணி | 15,000/- |
| 5 | 65 வயதிற்கு மேல் | கலை முதுமணி | 20,000/- |

2023-2024 ஆம் ஆண்டில் 22 மாவட்டங்களில் 660 கலைஞர்களுக்கு மாவட்ட கலை விருதுக்கான பாராட்டுச் சான்றிதழ்களும், விருதுத்தொகையும் வழங்கப்பட்டன.

கலைஞர்கள், அரசின் நிதி உதவி பெறுவதற்கும், அரசு நடத்தும் கலை நிகழ்ச்சிகளில் முன்னுரிமை பெறுவதற்கும் மற்றும் பயணச் சலுகை பெறுவதற்கும் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை, மாவட்டங்களில் 82,748 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 1.5 கலைக் கல்வி

### 1.5.1 அரசு இசைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வயலின், வீணை, பரதநாட்டியம், நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்; குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதஸ்வரம், தவில், கிராமியக் கலை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்; நட்டுவாங்கம் மற்றும் இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பு; மாலை

நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, பாரம்பரியக் கட்டடமான 'பிராடி கேசில்' கட்டடம் மற்றும் மாணவியர் விடுதி ஆகியவை ரூ.2.80 கோடி (ரூபாய் இரண்டு கோடியே எண்பது இலட்சம்) மதிப்பில் புனரமைக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான தளவாடங்கள், நவீன வகுப்பு உபகரணங்கள், அலுவலகப் பயன்பாட்டிற்கான தளவாடங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.18.95 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து சென்னை அரசு இசைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

**புதிய படிப்புகள்**

2023–2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, சென்னை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் தொடங்கிட ரூ.9.00 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தக் கல்வியாண்டிலேயே தொடங்கப்பட்டன.

**1.5.2 அரசு இசைக் கல்லூரி, மதுரை**

மதுரை, அரசு இசைக் கல்லூரியில் குரலிசை மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்; குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், தவில், புல்லாங்குழல், நாதஸ்வரம், பரதநாட்டியம் மற்றும் கிராமியக் கலை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்; இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பு; மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான தளவாடங்கள், நவீன வகுப்பு உபகரணங்கள், அலுவலகப் பயன்பாட்டிற்கான தளவாடங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.10.29 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சத்து இருபத்து ஒன்பதாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து மதுரை அரசு இசைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

**1.5.3 அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்**

கோயம்புத்தூர், அரசு இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை, வயலின் மற்றும் பரதநாட்டியம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்; குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம், தவில் மற்றும் நாதஸ்வரம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்; இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்பு; மாலை நேர இசைக் கல்லூரியில் குரலிசை, வீணை மற்றும் வயலின் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு சான்றிதழ் படிப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான தளவாடங்கள், நவீன வகுப்பு உபகரணங்கள், அலுவலகப் பயன்பாட்டிற்கான தளவாடங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.16.16 இலட்சம் (ரூபாய் பதினாறு இலட்சத்து பதினாறாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து கோயம்புத்தூர் அரசு இசைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, கோயம்புத்தூர், அரசு இசைக் கல்லூரியில் ரூ.1.97 கோடி (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றேழு இலட்சம்) மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட உள்ளன.

**1.5.4 அரசு இசைக் கல்லூரி, திருவையாறு**

திருவையாறு, அரசு இசைக் கல்லூரியில் இசையில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள்; குரலிசை மற்றும் வீணை ஆகியவற்றில்

இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகள்; குரலிசை, வீணை, வயலின், பரதநாட்டியம், நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டப்படிப்புகள்; குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், நாதஸ்வரம், தவில் மற்றும் கிராமியக்கலை ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு பட்டயப்படிப்புகள்; நட்டுவாங்கம் மற்றும் இசை ஆசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப்படிப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான தளவாடங்கள், நவீன வகுப்பு உபகரணங்கள், அலுவலகப் பயன்பாட்டிற்கான தளவாடங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.12.53 இலட்சம் (ரூபாய் பன்னிரெண்டு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து திருவையாறு அரசு இசைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

**புதிய படிப்புகள்**

2023-2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய துறைகளில் புதிய பட்டப்படிப்புகள் தொடங்கிட ரூ.9.00 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தக் கல்வியாண்டிலேயே தொடங்கப்பட்டன.

**ஊக்கத்தொகை**

அரசு இசைக்கல்லூரி மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ரூ.500/- (ரூபாய் ஐநூறு) வீதம் பத்து மாதங்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**1.5.5 அரசு இசைப்பள்ளிகள்**

மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவாரூர், சேலம், புதுக்கோட்டை, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர்,

தூத்துக்குடி, கரூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, சிவகங்கை, கிருஷ்ணகிரி, சீர்காழி (மயிலாடுதுறை மாவட்டம்), ஈரோடு மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. குரலிசை, பரதநாட்டியம், நாதஸ்வரம், தவில், தேவாரம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகியவற்றில் மூன்றாண்டு சான்றிதழ் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான தளவாடங்கள், நவீன வகுப்பு உபகரணங்கள் மற்றும் அலுவலகப் பயன்பாட்டிற்கான தளவாடங்கள் ரூ.102.90 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து மாவட்ட அரசு இசைப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**புதிய கட்டடங்கள்**

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு இசைப் பள்ளியின் புதிய கட்டடம் ரூ.1.10 கோடி (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம்) மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

கடலூர், மாவட்ட அரசு இசைப் பள்ளியின் புதிய கட்டடம் ரூ.1.60 கோடி (ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சம்) மதிப்பீட்டில் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலன் மற்றும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்களால் 27.11.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**ஊக்கத்தொகை**

அரசு இசைப்பள்ளி மாணவர்களுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ரூ.400/– (ரூபாய் நானூறு) வீதம் பத்து மாதங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 1.5.6 அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை

சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில் சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக் கலை (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகள்; சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic), துகிலியல் வடிவமைப்பு (Industrial Design in Textile), காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design), வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் பதிப்போவியம் (Print Making) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான வகுப்பறை தளவாடங்கள், பயிற்சி தளவாடங்கள்,

ஆய்வக உபகரணங்கள், மென்பொருட்கள், நவீன வகுப்பு உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.132.83 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து சென்னை அரசு கவின் கலைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, ரூ.7.33 கோடி (ரூபாய் ஏழு கோடியே முப்பத்து மூன்று இலட்சம்) மதிப்பீட்டில் சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள வெள்ளை மற்றும் சிகப்பு பாரம்பரியக் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

2023–2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, ரூ.23.01 கோடி (ரூபாய் இருபத்து மூன்று கோடியே ஒரு இலட்சம்)

மதிப்பீட்டில் சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் அனைத்து வசதிகளுடன் பதிப்போவியம், துகிலியல், கலை வரலாறு ஆகிய துறைகளுக்கான புதிய வகுப்பறைகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய நூலகமும் கட்டப்பட உள்ளது.

### 1.5.7 அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரியில் வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகள்; வண்ணக்கலை (Painting), சிற்பக்கலை (Sculpture) மற்றும் காட்சிவழித் தகவல் தொடர்பு வடிவமைப்பு (Visual Communication Design) ஆகிய பிரிவுகளில் நான்காண்டு இளங்கலைப் பட்டப்படிப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான வகுப்பறை தளவாடங்கள், பயிற்சி தளவாடங்கள், ஆய்வக உபகரணங்கள், மென்பொருட்கள், நவீன வகுப்பு உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.84.97 இலட்சம் (ரூபாய் எண்பத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து கும்பகோணம் அரசு கவின் கலைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் உள்ள பழைய கட்டடங்கள் ரூ.97.80 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்றேழு இலட்சத்து எண்பதாயிரம்) மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

2022-2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரிக்கு ரூ.15.26 கோடி (ரூபாய் பதினைந்து

கோடியே இருபத்தாறு இலட்சம்) மதிப்பீட்டில் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் விதிமுறைகளின்படி அனைத்து துறைகளுக்கும் வகுப்பறைகள், கணினி கூடம், கலையரங்கம், மாணவ மாணவியர் விடுதிகளின் கட்டடப்பணிகள், தளவாடப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு வசதிகளுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 1.5.8 அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, மாமல்லபுரம்

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் மரபு கட்டடக் கலையில் பி.டெக். (B.Tech in Traditional Architecture), மரபு சிற்பக் கலையில் பி.எப்.ஏ. (B.F.A. in Traditional Sculpture) (கற்சிற்பம், சுதைச் சிற்பம், மரச் சிற்பம் மற்றும் உலோகச் சிற்பம்), மரபு ஓவியம் மற்றும் வண்ணக் கலையில் பி.எப்.ஏ. (B.F.A. in Traditional Drawing and Painting) ஆகிய நான்காண்டு பட்டப்படிப்புகள் நடத்தப்படுகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாணாக்கர்களுக்கு தேவையான வகுப்பறை தளவாடங்கள், பயிற்சி தளவாடங்கள், ஆய்வக உபகரணங்கள், மென்பொருட்கள், நவீன வகுப்பு உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ரூ.91.99 இலட்சம் (ரூபாய் தொண்ணூற்றொன்று இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து மாமல்லபுரம் அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, மாமல்லபுரம், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியின் சிற்ப அருங்காட்சியகம் மேம்படுத்தப்பட்டு தேவையான நவீன உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.49.86 இலட்சம் (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து எண்பத்தாறாயிரம்) மதிப்பீட்டில் ஏற்படுத்தி, மாணவர்கள் உருவாக்கிய சிற்பங்கள் மற்றும் ஓவியப் பொருட்களைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5.9 கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி கலை பண்பாட்டுத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு நிதியுதவி பெறும் கல்லூரி ஆகும். இக்கல்லூரியில் பரதநாட்டியம் மற்றும் இசையில் முனைவர் பட்டப்படிப்பு; பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் இரண்டாண்டு முதுகலைப் பட்டப்படிப்புகள்; பரதநாட்டியம், குரலிசை, வயலின், வீணை, மிருதங்கம் மற்றும் புல்லாங்குழல் ஆகிய பிரிவுகளில் ஒருங்கிணைந்த ஐந்தாண்டு பட்டப்படிப்புகள் மற்றும் மூன்றாண்டு பட்டப்படிப்புகள் மற்றும் ஓராண்டு இசை ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்புகள் நடத்தப்படுகின்றன.

## 1.6 தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்

இசை, கவின்கலை மற்றும் நிகழ்த்துக்கலை ஆகிய அனைத்து கலைக்கல்விப் பிரிவுகளிலும், கல்விப் பயிற்சி வழங்குவதற்கும், இத்துறைகளில் ஆராய்ச்சிக்கான வழிவகைகள், கல்வி மேம்பாடு மற்றும் அறிவுசார் பரப்புரை செய்வதற்கும், பாரம்பரிய இந்திய இசை, நிகழ்த்துக்கலை மற்றும் கவின் கலைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவற்றைப் பாதுகாத்து வளர்த்து பிரபலப்படுத்தி மேம்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகச் சட்டம், 2013 மூலம் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் 14.11.2013 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 'தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம்' என 2020–ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப்பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டப் படிப்புகள், ஓவியம் மற்றும் காட்சி வழி தகவல் தொடர்பு வடிவமைப்பு பிரிவுகளில் மூன்றாண்டு பகுதி நேர முதுகலைப் பட்டப்படிப்புகள் (வார இறுதி நாட்களில்) மற்றும் குரலிசை, வீணை மற்றும் மிருதங்கம் ஆகிய துறைகளில் இரண்டாண்டு மேம்படுத்தப்பட்ட பட்டயப்படிப்புகள் இணையதளம் மூலம் பயிற்றுவிக்கப்படுகின்றன.

மேலும், இப்பல்கலைக்கழகத்தில் குரலிசை, வீணை, வயலின், மிருதங்கம், நாதஸ்வரம், பரதநாட்டியம் மற்றும் ஓவியம் ஆகிய பிரிவுகளில் முதுகலைப் பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கலை பண்பாட்டுத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிகள் நான்கு, அரசு கவின் கலைக் கல்லூரிகள் இரண்டு, அரசினர் கட்டடக்கலை

மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி ஆகிய 8 கல்லூரிகள் பல்கலைக்கழகத்தின் இணைவுடன் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் மற்றும் 10 சுயநிதிக் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன.

இந்தப் பல்கலைக்கழகத்துடன் 2013 முதல் 2023 ஆம் ஆண்டு வரை 11 வளாக மையங்கள் (Off Campus) ஏற்கனவே இணைவு பெற்றுள்ளன. தற்பொழுது 2023 முதல் 2024 ஆம் ஆண்டு வரை கூடுதலாக 12 வளாக மையங்கள் இணைவு பெற்றுள்ளன. மேலும், இம்மையங்களில் இசை மற்றும் கவின் கலைகளில் ஆறு மாத கால

சான்றிதழ் படிப்பு, ஒரு வருட பட்டயப்படிப்பு மற்றும் இரண்டாண்டு மேம்படுத்தப்பட்ட பட்டயப்படிப்பு ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

## பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைவு பெற்ற கல்லூரிகளில் 2019–2020 முதல் 2022–2023 வரையிலான கல்வியாண்டுகளில் பயின்ற 3448 மாணாக்கர்களுக்கு வழங்கப்படாமலிருந்த பட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 21.11.2023 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டன.

## சிறப்பு நிதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்

கலைப் பல்கலைக்கழகத்தின் நல்கைத்தொகை ரூ.2.03 கோடியிலிருந்து (ரூபாய் இரண்டு கோடியே மூன்று இலட்சம்) ரூ.3 கோடியாக (ரூபாய் மூன்று கோடி) உயர்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையம் (Research Centre), நூலகம் (Library) மற்றும் கற்றல் மேலாண்மை அமைப்பு முறை (Learning Management System) அமைத்திட ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி) ஒதுக்கீடு செய்து நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**புதிய படிப்புகள்**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் கிராமியக் கலை மற்றும் வில்லுப்பாட்டு பிரிவில் ஒரு

வருட பட்டயப்படிப்பு துவங்கிட ரூ.47.76 இலட்சம் (ரூபாய் நாற்பத்தேழு இலட்சத்து எழுபத்தாறாயிரம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2024-2025 ஆம் கல்வியாண்டில் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளது.

**புதிய கட்டடங்கள்**

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.14.85 கோடி (ரூபாய் பதினான்கு கோடியே எண்பத்தைந்து இலட்சம்) மதிப்பீட்டில் புதிய கட்டடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக திறந்தவெளி கலையரங்கம் ரூ.1.43 கோடி (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து மூன்று இலட்சம்) மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் (TANII)**

ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான இந்திய நாடகக் கலையின் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.2.67 கோடி (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தேழு இலட்சம்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. சிறப்பு குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நாடகக் கலை மூலம் அவர்களின் செயல் திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டமானது அவர்களின் உணர்வுத் திறன்கள், செயல் திறன்கள், ஆரோக்கிய நிலை ஆகியவற்றை மேம்படுத்தி, 'இயல்பான வாழ்க்கை' மேற்கொள்ள

அவர்களுக்கு உதவுகிறது. இப்பயிற்சியினை 2024-2025 ஆம் கல்வியாண்டில் துவங்கிட பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 1.7 தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம்

5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட சிறார்களுக்குக் கலைப்பயிற்சிகள் வழங்குதல் மற்றும் மறைந்துள்ள கலைத் திறமைகளை வெளிக்கொணருதல் ஆகியவை ஜவகர் சிறுவர் மன்றத்தின் நோக்கங்களாகும்.

ஜவகர் சிறுவர் மன்றங்கள் 32 இடங்களில் மாவட்ட ஜவகர் சிறுவர் மன்றங்களாகவும், 26 இடங்களில் விரிவாக்க மையங்களாகவும், 2 இடங்களில் ஊரக மையங்களாகவும் மொத்தம் 60 இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, சிறார்களுக்கான பயிற்சிப் பொருட்கள் ரூ.49.17 இலட்சம் (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து பதினேழாயிரம்) மதிப்பில் கொள்முதல் செய்து ஜவகர் சிறுவர் மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2023–2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தற்போது 8 புதிய மாவட்டங்கள் மற்றும் ஊரகப் பகுதிகள் என 20 புதிய ஜவகர் சிறுவர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்திற்கு ரூ.2.41 கோடி (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தொன்று இலட்சம்) மதிப்பீட்டில் சென்னை, மயிலாப்பூரில் புதிய கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 1.7.1 ஜவகர் சிறுவர் மன்றங்களில் பகுதி நேர பயிற்சிகள்

குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், கைவினை, நாடகம், உடல்திறன் பயிற்சி, மிருதங்கம், தபேலா, கராத்தே, கணினி, கீபோர்டு, வீணை, டிரம்ஸ், பேண்டு, தையல், ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல், திரைஅச்சு, புல்லாங்குழல், யோகா மற்றும் சிலம்பம் ஆகிய கலைகளில் சென்னையிலும், மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப, மேலுள்ள ஏதேனும் நான்கு கலைகளில் மாவட்ட மையங்களிலும் பகுதி நேரக் கலைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பயிற்சி திட்டங்கள்**

### 1.7.2 மாவட்ட அளவிலான கோடைக்காலக் கலைப் பயிற்சி முகாம்

மாணவர்களின் கோடை விடுமுறையை உபயோகமானதாகவும், மகிழ்வானதாகவும் ஆக்க மாவட்ட அளவிலான கோடைக்கால பயிற்சி முகாம்கள் ஜவகர் சிறுவர் மன்ற மையங்களில் நடத்தப்படுகின்றன.

### 1.7.3 மாநில அளவிலான கோடைக்கால மற்றும் குளிர்காலக் கலைப்பயிற்சி முகாம்கள்

மாநில அளவிலான கோடைக்கால உண்டுறை முகாம் கோடை விடுமுறையின் போது, ஏதாவது ஒரு மலை சுற்றுலாத்தலத்தில் நடத்தப்படுகிறது. மாநில அளவிலான குளிர்கால உண்டுறை பயிற்சி முகாம் அரையாண்டு விடுமுறையின் போது, ஏதேனும் ஒரு மாவட்டத்தில் நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 100 ஜவகர் சிறுவர் மன்ற சிறார்கள் பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம், குரலிசை, ஓவியம், கைவினை, யோகா மற்றும் சிலம்பம் ஆகியவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்று பயிற்சி பெறுகின்றனர்.

### 1.7.4 மாநில அளவிலான கைவினைக் கலைப் பயிற்சி முகாம்

மாநில அளவிலான உண்டுறை கைவினை முகாம் காலாண்டு விடுமுறையின்போது நடத்தப்படுகிறது. இம்முகாமில் சுடுமண் சிற்பம்,

பொம்மை செய்தல், துணி ஓவியம், பத்திக், கைவினை மற்றும் மெழுகுவர்த்தி செய்தல் போன்ற பல்வேறு கலைகளில் மாநிலத்திலுள்ள 100 ஜவகர் சிறுவர் மன்ற சிறார்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

### 1.7.5 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலைப் போட்டிகள்

மாணவர்களின் கலைத்திறனை அடையாளம் காணவும், ஊக்கப்படுத்தவும் குரலிசை, பரதநாட்டியம், நாட்டுப்புற நடனம் மற்றும் ஓவியம் ஆகிய கலைகளில் 5 முதல் 8 வயது, 9 முதல் 12 வயது மற்றும் 13 முதல் 16 வயது பிரிவினர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவிலான போட்டிகளில் 9 முதல் 12 வயது, 13 முதல் 16 வயது பிரிவினர்களில் முதல் பரிசு பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளில்

கலந்து கொள்கின்றனர். ஒவ்வொரு வயது பிரிவுக்கும் நான்கு துறைகளில் மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு பெறும் வெற்றியாளர்கள் முறையே ரூ.10,000/− (ரூபாய் பத்தாயிரம்), ரூ.7,500/− (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு) மற்றும் ரூ.5,000/− (ரூபாய் ஐந்தாயிரம்) பரிசுத் தொகையாகப் பெறுகிறார்கள். 24 வெற்றியாளர்களுக்கு மொத்த பரிசுத் தொகையாக ரூ.1,80,000/− (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம்) மற்றும் பதக்கங்கள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

### 1.7.6 தேசிய அளவிலான திட்டங்களில் ஜவகர் சிறுவர் மன்ற மாணாக்கர்கள் பங்கேற்பு

பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகப் புதுதில்லி தேசிய சிறுவர் மன்றம், தேசிய ஒருமைப்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை மூன்று நாட்களுக்கு நடத்துகிறது. தமிழ்நாட்டில் உள்ள

21 இணைவு பெற்ற ஜவகர் சிறுவர் மன்றங்களின் சிறார்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

## 1.8 ஓவிய நுண்கலைக்குழு

### 1.8.1 கலைச்செம்மல் விருதுகள்

மரபுவழி மற்றும் நவீன பாணி ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு 'கலைச்செம்மல்' விருது வழங்கி ஊக்குவிக்கிறது. செப்புப் பட்டயம், விருதுத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 6 புகழ்பெற்ற கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில் கடந்த ஆண்டுகளில் (2020-2021 முதல் 2022-2023 வரை) வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த கலைச்செம்மல் விருதுகளை, 10.10.2023 அன்று 2020-2021 ஆம் ஆண்டுக்கு

6 கலைஞர்களுக்கும், 05.02.2024 அன்று 2021–2022 முதல் 2023–2024 வரையிலான ஆண்டுகளுக்கு 18 கலைஞர்களுக்கும் தலா ஒரு இலட்சத்திற்கான காசோலையும், செப்புப்பட்டயமும் (கலைச்செம்மல் விருது) மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இதுவரை, பாரம்பரியக் கலைகளில் 33 புகழ்பெற்ற கலைஞர்களுக்கும், நவீனபாணி கலைகளில் 64 புகழ்பெற்ற கலைஞர்களுக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.8.2 மாநில அளவில் மரபுவழி, நவீனபாணி பிரிவுகளில் ஓவிய–சிற்பக் கலைக்காட்சி மற்றும் பரிசுத் தொகை

அரசால் அமைக்கப்பட்ட தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட திறமையான கலைஞர்களின் சிறந்த ஓவியங்கள் மற்றும் சிற்பங்களைக் கொண்டு மாநில அளவிலான கலைக்காட்சிகள்

நடத்தப்படுகின்றன. காட்சிப்படுத்தப்பட்ட படைப்புகளில் மிகச் சிறந்த படைப்புகளுக்கு பரிசளிக்கப்படுகிறது. மூத்தோர் பிரிவில் (30 வயதிற்கு மேல்) 30 கலைஞர்களுக்கு தலா ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம்) வீதம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும், இளையோர் பிரிவில் (30 வயதிற்குக் கீழ்) 20 கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 2022–2023 ஆம் நிதியாண்டு முதல் 10 சிறந்த ஓவிய–சிற்பக் கலையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் பரிசுத்தொகையும், 10 ஓவியம்–சிற்பம் சார்ந்த சிறந்த கலை நூலாசிரியர்களுக்கு தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் பரிசுத் தொகையும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் 10.10.2023

அன்று சென்னை, அரசு அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்ட மாநில அளவிலான கலைக்காட்சியினைத் திறந்து வைத்து, மூத்தோர் பிரிவில் 30 கலைஞர்களுக்கு தலா ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம்) வீதமும், இளையோர் பிரிவில் 20 கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வீதமும், 10 சிறந்த ஓவிய-சிற்பக் கலையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வீதமும், 4 சிறந்த ஓவியம்-சிற்பக் கலை நூலாசிரியர்களுக்கு தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம்) வீதமும் என மொத்தம் ரூ.7.90 இலட்சத்திற்கான (ரூபாய் ஏழு இலட்சத்து தொண்ணூறாயிரம்) பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினார்கள்.

### 1.8.3 தனி நபர் கலைக்காட்சி (One man Show) மற்றும் கூட்டுக் கலைக்காட்சி (Group Show) நடத்திட கவின் கலைஞர்களுக்கு நிதியுதவி

ஓவியம் மற்றும் சிற்பக் கலைகளில் திறமைமிக்க வளரும் கலைஞர்களை ஊக்கப்படுத்த

தனிநபர் கலைக் காட்சிகள் மற்றும் கூட்டுக் கலைக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. தனிநபர் கலைக்காட்சி நடத்த தலா ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) வீதம் 10 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக்காட்சி நடத்த குழுவிற்கு தலா ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) வீதம் 5 குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில் தனிநபர் கலைக்காட்சி நடத்திட ஒரு கலைஞருக்கு ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) வீதம் 8 கலைஞர்களுக்கும், கூட்டுக் கலைக்காட்சி நடத்திட ஒரு குழுவிற்கு ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) வீதம் ஐந்து குழுக்களுக்கும் என மொத்தம் ரூ.4.50 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம்) நிதியுதவி வழங்கப்பட்டது.

### 1.8.4 கவின் கலை பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை

அரசு கவின் கலைக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஊக்கப்படுத்தும் விதமாக சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில், இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணாக்கர்களுக்குத் தலா ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) வீதமும், இறுதியாண்டு முதுகவின் கலை பயிலும் சிறந்த 4 மாணாக்கர்களுக்குத் தலா ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) வீதமும் கல்வி உதவித்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. கும்பகோணம், அரசு கவின் கலைக் கல்லூரியில் இறுதியாண்டு இளங்கவின் கலை பயிலும் சிறந்த 10 மாணாக்கர்களுக்குத் தலா ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம்) வீதமும், இறுதியாண்டு முதுகவின் கலை பயிலும் சிறந்த 2 மாணாக்கர்களுக்குத் தலா ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) வீதமும் கல்வி உதவித்தொகை

வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுதோறும் 26 சிறந்த மாணாக்கர்கள் பயனடைகின்றனர். இதற்கென ஆண்டொன்றுக்கு மொத்தம் ரூ.90,000/- (ரூபாய் தொண்ணூறாயிரம்) நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**1.9 தென்னகப் பண்பாட்டு மையம், தஞ்சாவூர்**

இந்திய அரசின் கலாச்சாரத் துறையின் ஒரு தன்னாட்சி அமைப்பாக, தஞ்சாவூரில், தென்னகப் பண்பாட்டு மையம் 1986 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இம்மையம் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய ஐந்து தென்னிந்திய மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, இலட்சத்தீவு, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் ஆகிய மூன்று யூனியன் பிரதேசங்களின் ஒத்துழைப்புடன் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டு நல்கைத்தொகை ரூ.7.50 இலட்சத்தில் (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) வில்லிசை விழா, மார்கழி இசை விழா,

திருப்பாவை விழா, குமரி கலை விழா ஆகிய விழாக்களை மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தின.

**1.10 சங்கமம் 'நம்ம ஊரு திருவிழா'**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர், காஞ்சிபுரம் மற்றும் வேலூர் ஆகிய ஒன்பது நகரங்களில் 'நம்ம ஊரு திருவிழா' என்ற பிரம்மாண்டமான நாட்டுப்புறக் கலை விழாவை நடத்திட ரூ.9.90 கோடி (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூறு இலட்சம்) நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் கலை விழாக்கள் நடத்தி முடிக்கப்பட்டன. காஞ்சிபுரம், வேலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும்

திருநெல்வேலி ஆகிய நகரங்களில் கலை விழாக்கள் நடத்தப்பட உள்ளன.

### 1.11 பகுதி நேர கலைப்பயிற்சிகள்

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் 2023–2024 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, நாட்டுப்புறக் கலைகளைப் பாதுகாக்கவும், இக்கலைகள் வருங்காலத்தில் செழித்து வளரும் வகையில் தமிழ் நாட்டில் 25 பகுதி நேர நாட்டுப்புறக் கலைப் பயிற்சி மையங்களை நடத்துவதற்கு ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இக்கலைப்பயிற்சிகள் 2024–2025 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட உள்ளன.

2023–2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாட்டின் கலை வடிவங்களை அழியாமல் பாதுகாக்கவும், அவற்றை வளர்க்கவும் 100 அரசுக் கல்லூரிகளில் பயிலும்

மாணாக்கர்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாட்கள் கலைப் பயிற்சி வகுப்புகள் நடத்திட ரூ.85.00 இலட்சம் (ரூபாய் எண்பத்தைந்து இலட்சம்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்பயிற்சி வகுப்புகள் 2024-2025 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட உள்ளன.

### 1.12 கலைஞர் நூற்றாண்டு விழா

கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு 'கலைஞர் பண்பாட்டு பாசறை' என்னும் தலைப்பில் 09.02.2024 அன்று கடலூரில் நிறைவு விழா, மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு இந்துசமய அறநிலையங்கள் துறை அமைச்சர்

ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் புகைப்படங்கள் மற்றும் ஓவியக் கண்காட்சி, கடலூர் மாவட்டத்தின் பல்வேறு துறைகளின் சாதனை விளக்கக் கண்காட்சி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், மாவட்ட அளவிலான பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணாக்கர்களுக்குப் பரிசுகளும், சிறந்த கலைஞர்களுக்கு மாவட்டக் கலை விருதுகளும் வழங்கப்பட்டன.

கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் கலைஞர் நூற்றாண்டினை சிறப்பாக கொண்டாடும் வகையில், ஏழு மண்டலக் கலை பண்பாட்டு மையங்களின் வாயிலாக மாவட்டங்கள் தோறும் கலை நிகழ்ச்சிகளும், அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசினர் கட்டடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரிகளில் கண்காட்சிகளும், அரசு இசைக் கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் இசை விழாக்களும் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் 12.10.2023 அன்று ரூ.1.60 இலட்சத்தில் (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம்) 150 கலைஞர்களைக் கொண்டு இசை விழாக்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டினை சிறப்பாக கொண்டாடும் வகையில் 14.07.2023 முதல் 16.07.2023 வரை ரூ.4.32 இலட்சத்தில் (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம்) 55 கலைஞர்களைக் கொண்டும், 28.08.2023 முதல் 30.08.2023 வரை ரூ.8.15 இலட்சத்தில் (ரூபாய் எட்டு இலட்சத்து பதினைந்தாயிரம்) 200 கலைஞர்களைக் கொண்டும் கலை விழாக்கள் நடத்தப்பட்டன.

## 1.13 அயல் நாடுகள் / மாநிலங்களில் கலை நிகழ்ச்சிகள்

1. மலேசியா தலைநகர் கோலாலம்பூர் ஸ்ரீமகா மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழாவில் 23.06.2023 முதல் 25.06.2023 வரை இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

2. சண்டிகர் தமிழ்ச் சங்கத்தின் வைகாசிப் பெருவிழாவில் 24.05.2023 முதல் 27.05.2023 வரை கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

3. ஜெய்ப்பூர், ஜவகர் கலா கேந்திராவால் நடத்தப்பட்ட லோக்ரங் – தேசிய கிராமியக் கலைவிழாவில் 29.10.2023 முதல் 08.11.2023 வரை கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

4. தெலுங்கானா தமிழ்ச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழாவில் 24.12.2023 மற்றும் 25.12.2023 ஆகிய நாட்களில் முறையே செகந்திராபாத்திலும், ஐதராபாத்திலும் பரதநாட்டியம், நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

5. புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் நடைபெற்ற பொங்கல் கலைவிழாவில் 13.01.2024 முதல் 16.01.2024 வரை நாட்டுப்புறக்கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**1.14 சிறப்பு கலை நிகழ்ச்சிகள்**

1. சென்னையில் நடைபெற்ற ஜி–20 மாநாட்டு நிகழ்வில் பரதநாட்டியம், வாத்திய இசை மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் 200–க்கும் மேற்பட்ட கலைஞர்களால் 24.07.2023, 26.07.2023, 27.07.2023 மற்றும் 28.07.2023 ஆகிய நாட்களில் நிகழ்த்தப்பட்டன.

2. மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஜி–20 மகளிர் உச்சி மாநாட்டில், 15.06.2023 அன்று பரதநாட்டியம் மற்றும் நாட்டுபுறக் கலை நிகழ்ச்சிகளும், 18.06.2023 அன்று கருவியிசை நிகழ்ச்சியும், 19.06.2023 அன்று சென்னையில் நடைபெற்ற நிதிப் பணிக்குழுக் கூட்டத்தில் பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் 100–க்கும் மேற்பட்ட கலைஞர்களால் நிகழ்த்தப்பட்டன.

3. 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு நிகழ்வில், 09.01.2024 அன்று சென்னையில் 28 இடங்களில் 300-க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

4. சென்னை, வர்த்தக மையத்தில் நடைபெற்ற 'அயலகத் தமிழர் திருநாள்' கொண்டாட்டத்தின் போது 11.01.2024 மற்றும் 12.01.2024 ஆகிய நாட்களில் கலை நிகழ்ச்சிகளும், கண்காட்சி அரங்கும் ஏற்பாடு செய்யப்பட்டன.

5. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறையின் வாயிலாக 29.04.2023 அன்று சென்னையில் நடைபெற்ற மருத்துவ சுற்றுலா உச்சி மாநாட்டில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**1.15 தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்**

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கி நாட்டுப்புறக் கலைகளை வளர்க்கவும், மக்களிடையே அக்கலைகளை பிரபலப்படுத்தவும் மேலும், இந்த நாட்டுப்புறக் கலைகள் அழியாமல் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லவும் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், 2007–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு நாட்டுப்புறக் கலை வடிவங்களை நிகழ்த்தும் பணியில் நாட்டுப்புறக் கலைஞர்கள் ஈடுபடுகின்றனர். தமிழ்நாடு அரசு 99 நாட்டுப்புறக் கலை வடிவங்களை அடையாளம் கண்டு பட்டியலிட்டுள்ளது.

இதுவரை 55,519 நாட்டுப்புறக் கலைஞர்கள் வாரிய உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். ரூ.209.11 இலட்சம் (ரூபாய் இரண்டு கோடியே

ஒன்பது இலட்சத்து பதினொன்றாயிரம்) நிதி ஒதுக்கீட்டில் 9,157 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நலத்திட்ட உதவிகள் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளன.

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் விவரம் | பயனாளிகள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூக்குக் கண்ணாடி வாங்குதல் | 3878 | 24.57 |
| 2 | கல்வி | 3826 | 54.42 |
| 3 | திருமணம் | 657 | 17.33 |
| 4 | மகப்பேறு | 20 | 1.20 |
| 5 | இயற்கை மரணம் / ஈமச் சடங்கு செலவு | 776 | 111.59 |
| மொத்தம் | | 9157 | 209.11 |

நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு மற்றும்

இறப்பு போன்றவற்றிற்கு பின்வருமாறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன:–

| **வ. எண்** | **நிதி உதவிகள் விவரம்** | **தொகை (ரூ.)** |
|---|---|---|
| 1 | ஆண்டு கல்வி உதவித் தொகை (இரண்டு வாரிசுகள்) | |
| | பத்தாம் வகுப்பு பயிலும் மகள் | 1,000/– |
| | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | பதினோராம் வகுப்பு பயிலும் மகள் | 1,000/– |
| | பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மகள் | 1,500/– |
| | பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | முழுநேர பட்டப் படிப்பு | 1,500/– |
| | முழுநேர பட்டப் படிப்பு விடுதி வசதியுடன் | 1,750/– |
| | முழுநேர முதுகலைப் பட்டப்படிப்பு | 4,000/– |
| | முழுநேர முதுகலைப் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 5,000/– |
| | தொழிற் பட்டப்படிப்பு (சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம்) | 4,000/– |

| | | |
|---|---|---|
| | தொழிற் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 6,000/– |
| | முழுநேர முதுகலை தொழிற் பட்டப்படிப்பு | 6,000/– |
| | முழுநேர முதுகலை தொழிற் பட்டப்படிப்பு விடுதி வசதியுடன் | 8,000/– |
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) | 1,000/– |
| | தொழில்நுட்பப் பயிலகப் படிப்பு (பாலிடெக்னிக்), தொழிற்பயிற்சி நிலைய படிப்பு (ஐ.டி.ஐ) விடுதி வசதியுடன் | 1,200/– |
| 2 | திருமண நிதியுதவி<br>உறுப்பினர்/ மகன்/மகள்<br>( இரண்டு முறை மட்டும்) | 5,000/– |
| 3 | மகப்பேறு / கருச்சிதைவு நிதியுதவி (பெண் உறுப்பினர்களுக்கு இரண்டு முறை மட்டும்) | |
| | அ) குழந்தை பிறப்பு | 6,000/– |
| | ஆ) கருச்சிதைவு | 3,000/– |
| 4 | மூக்கு கண்ணாடி வாங்குவதற்கான நிதியுதவி (மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை மட்டும்) | 1,500/– |
| 5 | இயற்கை மரணச் செலவுகள் | 20,000/– |

| | | |
|---|---|---|
| 6 | ஈமச்சடங்கு செலவுகள் | 5,000/– |
| 7 | விபத்து மரணச் செலவுகள் | 1,00,000/– |

2023–2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் ஆண்டு நல்கைத் தொகையினை ரூ.35.00 இலட்சத்திலிருந்து (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம்) ரூ.90.00 இலட்சம் (ரூபாய் தொண்ணூறு இலட்சம்) ஆக உயர்த்தியும், தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.9.00 இலட்சமும் (ரூபாய் ஒன்பது இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 1.16 தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பானது தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலைகளை ஊக்குவிக்க 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டு, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க் கலைகளை அங்கீகரிக்கும் வகையில் 1973 ஆம் ஆண்டில்

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த அமைப்பு இயல், இசை, நாடக வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. தமிழ்நாடு அரசு வழங்கும் நல்கையின் வாயிலாக பல்வேறு கலைப் பிரிவுகளைச் சேர்ந்த கலைஞர்கள் பயனடையும் வண்ணம் பல்வேறு கலைப்பணித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**கலைப்பணிகள்**

- மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிமாற்றம் செய்தல்.
- கலைஞர்களின் கலைச் சேவைக்காக அவர்களுக்கு மாநில அளவில் கலைமாமணி விருது வழங்கும் திட்டத்தை செயல்படுத்துதல்.

- அகில இந்திய அளவில் கீழ்க்கண்ட 3 விருதுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்துதல்.
    - இலக்கியத்திற்கான 'பாரதி' விருது,
    - இசைக்கான 'எம்.எஸ்.சுப்புலட்சுமி' விருது,
    - நடனத்திற்கான 'பாலசரஸ்வதி' விருது.
- தொழில்முறை நாடகக் குழுக்கள் மற்றும் நாட்டிய நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி அளித்தல்.
- பல்வேறு கலை விழாக்கள் நடத்துதல் மற்றும் அயல்நாடுகளில் பாரம்பரிய தமிழ் கலைகளைப் பரப்புதல்.
- இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் கலை நிகழ்ச்சிகள் நடத்த வாய்ப்பளித்தல்.
- அரிய கலை நூல்களை பதிப்பித்திட நல்கை வழங்குதல்
- அரிய கலை வடிவங்களை ஆவணப்படுத்துதல்.

**கலைமாமணி விருது**

5 சவரன் (40 கிராம்) தங்கப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழும் ஒவ்வொரு கலைமாமணி விருதாளருக்கும் வழங்கப்படுகின்றன. இதுவரை 1,924 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

**இதர பணிகள்**

- நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைமாமணி விருதாளர்களுக்கு தலா ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம்) மதிப்பிலான பொற்கிழி வழங்குதல்.
- மறைந்த புகழ்பெற்ற கலைஞர்களின் குடும்பங்களுக்கு ஒரு முறை ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) குடும்ப பராமரிப்பு நிதியுதவியாக வழங்குதல்.
- நலிந்த நிலையில் வாழும் மூத்த கலைஞர்களுக்குத் திங்கள் தோறும் ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம்) நிதியுதவியாக வழங்குதல்.

- புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரிக்க நல்கை வழங்குதல்.
- நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை அணிகலன்கள் வாங்குவதற்கு நல்கை வழங்குதல்.
- நாடகக் கலைஞர்கள் மற்றும் கலைக் குழுக்கள், வெளியூர்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்த தொடர்வண்டி மற்றும் அரசுப் பேருந்துகளில் பயணிக்க பயணக் கட்டண சலுகை வழங்க பரிந்துரை செய்தல்.

**நிகழ்ச்சிகள்**

1. 29.09.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் தேர்வு செய்யப்பட்ட 1000 நலிந்த கலைஞர்களுக்கு திங்கள்தோறும் ரூ.3000/– (ரூபாய் மூன்றாயிரம்) நிதியுதவி வழங்குவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

2. 29.09.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் கலைமாமணி விருது பெற்று, தற்போது நலிந்த நிலையில் வாழும் 10 மூத்த கலைஞர்களுக்குத் தலா ரூ.1.00 இலட்சத்திற்கான (ரூபாய் ஒரு இலட்சம்) பொற்கிழி ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டன.

3. 29.09.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு தலா ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) வீதம் ரூ.50.00 இலட்சத்திற்கான (ரூபாய் ஐம்பது இலட்சம்) இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கான தொகை வழங்கப்பட்டன.

4. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் அலுவலகக் கட்டடம் ரூ.1.54 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சம்) மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 28.01.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**அயல் நாடுகளில் கலை நிகழ்ச்சி**

அமெரிக்கா தமிழ்ச் சங்கத்தில் 01.07.2023 மற்றும் 02.07.2023 ஆகிய நாட்களில் ரூ.27.50 இலட்சம் (ரூபாய் இருபத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம்) மதிப்பீட்டில் 11 கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**உட்கட்டமைப்பு மேம்படுத்துதல்**

1. 2023-2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திரையரங்கம் ரூ.50.00 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம்) மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ளது.

2. 2023-2024 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் உள்ள பழம்பெரும் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் கலைப்படைப்புகள் ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம்) மதிப்பீட்டில் டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தி பாதுகாக்கப்பட உள்ளன.

1.17 முடிவுரை

தமிழ்நாட்டின் பெருமைமிக்க கலை வடிவங்களையும், வண்ணமயமான கலாச்சாரத்தையும் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் கலை பண்பாட்டுத் துறை பல திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி, திறம்படச் செயல்பட்டு வருகிறது. இசைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் அடுத்த தலைமுறைக்குக் கலை மற்றும் நுண்கலைகளில் பயிற்சி அளிக்க ஏற்பாடு

செய்யப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்த திறமைகள், மதிப்புமிக்க விருதுகள் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றன. நம் மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் மற்றும் அயல்நாடுகளிலும் பல கலை வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும், பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கி உதவிகளை ஏற்பாடு செய்வதன் மூலமும் கலைஞர்களின் நல்வாழ்வு உறுதி செய்யப்படுகிறது.

# இணைப்பு
# 2023-2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்

| வ எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்த்தில்) | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | தமிழிசை விழா | மதுரை 15.03.2023 முதல் 17.03.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.50 | 17 |
| 2 | தமிழிசை விழா | சீர்காழி 20.03.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, சீர்காழி | 0.75 | 40 |
| 3 | தமிழிசை விழா | ஈரோடு 20.03.2023, 21.03.2023. | மாவட்ட அரசு இசைப்பள்ளி, ஈரோடு | 0.75 | 22 |
| 4 | தமிழிசை விழா | கிருஷ்ணகிரி 20.03.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, கிருஷ்ணகிரி | 0.75 | 11 |
| 5 | தமிழிசை விழா | தூத்துக்குடி 24.03.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, தூத்துக்குடி | 0.75 | 13 |
| 6 | தமிழிசை விழா | 25.03.2023 இராமநாதபுரம் | மாவட்ட அரசு இசைப்பள்ளி, இராமநாதபுரம் | 0.75 | 27 |
| 7 | தமிழிசை விழா | சென்னை 27.03.2023 முதல் 31.03.2023 வரை | கலை பண்பாட்டு இயக்ககம், சென்னை | 1.50 | 29 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | தமிழிசை விழா | சேலம் 28.03.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, சேலம் | 0.75 | 14 |
| 9 | தமிழிசை விழா | கோயம்புத்தூர் 29.03.2023 முதல் 31.03.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.50 | 16 |
| 10 | தமிழிசை விழா | திருச்சி 31.03.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருச்சி | 0.75 | 13 |
| 11 | கலைச் சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 01.04.2023, 02.04.2023. | தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை | 1.25 | 26 |
| 12 | தமிழிசை விழா | சிவகங்கை 06.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, சிவகங்கை | 0.75 | 20 |
| 13 | தமிழிசை விழா | பெரம்பலூர் 06.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, பெரம்பலூர் | 0.75 | 11 |
| 14 | மாவட்டங்களில் கலை விழா (அக்னீஸ்வரர் ஆலயம்) | தஞ்சாவூர் 08.04.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.15 | 13 |
| 15 | கலைச் சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 08.04.2023, 09.04.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.25 | 29 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | கலை சங்கமம் மற்றும் மாவட்டங்களில் கலை விழா புகைப்பட கண்காட்சி | திருச்சிராப்பள்ளி 09.04.2023, 14.04.2023, 16.04.2023, 17.04.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 0.83 | 48 |
| 17 | தமிழிசை விழா | திருவையாறு 10.04.2023 முதல் 12.04.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.50 | 26 |
| 18 | தமிழிசை விழா | கரூர் 11.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, கரூர் | 0.75 | 13 |
| 19 | தமிழிசை விழா | காஞ்சிபுரம் 11.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, காஞ்சிபுரம் | 0.75 | 11 |
| 20 | தமிழிசை விழா | விழுப்புரம் 12.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, விழுப்புரம் | 0.75 | 12 |
| 21 | தமிழிசை விழா | திருவண்ணாமலை 12.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருவண்ணாமலை | 0.75 | 17 |
| 22 | தமிழிசை விழா | திருநெல்வேலி 13.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருநெல்வேலி | 0.75 | 13 |
| 23 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 15.04.2023, 16.04.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.25 | 32 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24 | புத்தகத் திருவிழா (கலைச் சங்கமம்) | (நாகர்கோயில்) கன்னியாகுமரி 15.04,2023 முதல் 18.04.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 0.63 | 20 |
| 25 | தமிழிசை விழா | புதுக்கோட்டை 18.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, புதுக்கோட்டை | 0.75 | 13 |
| 26 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 22.04.2023, 23.04.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 1.25 | 30 |
| 27 | கலைச்சங்கமம் மற்றும் புத்தகக் கண்காட்சியில் மாவட்டக் கலை விழா | அரியலூர் 24.04.2023 முதல் 28.04.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 0.98 | 34 |
| 28 | தமிழிசை விழா | திருவாரூர் 25.04.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, திருவாரூர் | 0.75 | 14 |
| 29 | கலைச்சங்கமம் தொடக்க விழா | சென்னை (தீவுத்திடல்) 28.04.2023 | கலை பண்பாட்டு இயக்ககம் | 1.25 | 30 |
| 30 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 29.04.2023, 30.04.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.25 | 36 |
| 31 | சர்வதேச மருத்துவ சுற்றுலா மாநாடு கலை நிகழ்ச்சிகள் | சென்னை 29.04.2023 | கலை பண்பாட்டு இயக்ககம் | 2.13 | 40 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32 | சென்னை விழாவில் கலை நிகழ்ச்சிகள் | (தீவுத்திடல்) சென்னை 29.04.2023 முதல் 21.05.2023 வரை | கலை பண்பாட்டு இயக்ககம் | 20.07 | 150 |
| 33 | உலக நாட்டிய தினம் நிகழ்ச்சிகள் | மதுரை 03.05.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.50 | 40 |
| 34 | இந்திர விழா | (பூம்புகார்) மயிலாடுதுறை 05.05.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 2.00 | 56 |
| 35 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 06.05.2023, 07.05.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.25 | 23 |
| 36 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 13.05.2023, 14.05.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.25 | 31 |
| 37 | உலக நாடக தின விழா | (சித்தன்ன வாசல்) புதுக்கோட்டை 20.05.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 1.50 | 21 |
| 38 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 20.05.2023, 21.05.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.25 | 31 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 39 | கோடை விழா | ஏற்காடு (சேலம்) 21.05.2023 முதல் 26.05.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.80 | 72 |
| 40 | உலக நாட்டிய தின விழா | மயிலாடுதுறை 25.05.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.50 | 15 |
| 41 | கோடை விழா | வால்பாறை (கோயம்புத்தூர் 26.05.2023 முதல் 28.05.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 2.00 | 84 |
| 42 | கோடை விழா | கொடைக்கானல் 26.05.2023 முதல் 01.06.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.54 | 125 |
| 43 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 27.05.2023 28.05.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.25 | 28 |
| 44 | கோடை விழா | உதகை (நீலகிரி) 06.05.2023, 19.05.2023 மற்றும் 30.05.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 2.00 | 100 |
| 45 | உலக நாட்டிய தின விழா | சேலம் 01.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 | 73 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 46 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 03.06.2023 04.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.25 | 51 |
| 47 | வைகாசி உற்சவம் கிராமிய கலை நிகழ்ச்சிகள் | கரந்தை, தஞ்சாவூர் 04.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.27 | 11 |
| 48 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 09.06.2023 10.06.2023 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 3.78 | 53 |
| 49 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 10.06.2023 11.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.25 | 43 |
| 50 | மாண்புமிகு முதலமைச்சர் வருகை கிராமிய கலை நிகழ்ச்சிகள் | சேலம் 11.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 | 87 |
| 51 | உலக நாட்டிய தினம் நாட்டிய விழா | காஞ்சிபுரம் 11.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.50 | 21 |
| 52 | உலக நாட்டிய தினம் நாட்டிய விழா | தூத்துக்குடி 15.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.50 | 47 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 53 | உலக நாட்டிய தினம் நாட்டிய விழா | திருச்சிராப்பள்ளி 15.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 1.50 | 43 |
| 54 | கலைஞர் நூற்றாண்டு விழா | உதகை 17.06.2023 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 2.09 | 100 |
| 55 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 17.06.2023, 18.06.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 1.25 | 37 |
| 56 | கிராமியக் கலை நிகழ்ச்சி | கற்பக விநாயகர் ஆலயம், தஞ்சாவூர் 22.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.27 | 11 |
| 57 | நாகை கோடை விழா | நாகப்பட்டிணம் 24.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.27 | 13 |
| 58 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 24.06.2023, 25.06.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.25 | 42 |
| 59 | மாவட்டங்களில் கலை விழா | திருநெல்வேலி 28.06.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 0.25 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60 | நெய்தல் கோடை விழா | கடலூர் 30.06.2023 முதல் 02.07.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.85 | 45 |
| 61 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 01.07.2023, 02.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.25 | 49 |
| 62 | உலக தமிழாராய்ச்சி மாநாடு கலை நிகழ்ச்சிகள் | சென்னை 07.07.2023 | கலை பண்பாட்டு இயக்ககம் | 1.00 | 35 |
| 63 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 08.07.2023, 09.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.25 | 25 |
| 64 | ஓவிய–சிற்பக் கலைப் பயிற்சி முகாம் | திருச்சிராப்பள்ளி 10.07.2023, 11.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 0.71 | 52 |
| 65 | புத்தகத் திருவிழா | அரியலூர் 14.07.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 0.75 | 42 |
| 66 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 14.07.2023 முதல் 16.07.2023 வரை | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 4.32 | 55 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 67 | மாங்கனி கண்காட்சி | கிருஷ்ணகிரி 14.07.2023 முதல் 18.07.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 | 35 |
| 68 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 15.07.2023, 16.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.25 | 40 |
| 69 | புத்தகத் திருவிழா | தஞ்சாவூர் 16.07,2023 முதல் 19.07.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.50 | 61 |
| 70 | ஓவிய–சிற்பக் கலைப் பயிற்சி முகாம் | கள்ளக்குறிச்சி 17.07.2023, 18.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.71 | 53 |
| 71 | ஜமுனாமரத்தூர் கோடை விழா, டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா | திருவண்ணாமலை 18.07.2023, 19.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.13 | 56 |
| 72 | கலைஞர் நூற்றாண்டு விழா | ஜவ்வாதுமலை 20.07.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.63 | 40 |
| 73 | உலக நாட்டிய தினம் நிகழ்ச்சிகள் | பொள்ளாச்சி கோயம்புத்தூர் 21.07.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.50 | 60 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 74 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 22.07.2023, 23.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.25 | 40 |
| 75 | ஜி–20 மாநாடு கலை நிகழ்ச்சிகள் | சென்னை மற்றும் மாமல்லபுரம் 24.07.2023 முதல் 28.07.2023 வரை | கலை பண்பாட்டு இயக்ககம் | 5.00 | 90 |
| 76 | கலைச்சங்கமம் | அருங்காட்சியகம் (சென்னை) 29.07.2023, 30.07.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.25 | 40 |
| 77 | ஆடிப்பெருக்கு விழா | ஒகனேக்கல் (தருமபுரி) 02.08.2023, 03.08.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 | 70 |
| 78 | வல்வில் ஓரி விழா | கொல்லி மலை (நாமக்கல்) 02.08.2023, 03.08.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 | 75 |
| 79 | ஆடிக் கிருத்திகை விழா | திருத்தணி (திருவள்ளூர்) 02.08.2023, 03.08.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.50 | 20 |
| 80 | கலைஞர் நூற்றாண்டு விழா | திருச்சிராப்பள்ளி 08.08.2023 | திருச்சிராப்பள் ளி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி | 0.50 | 53 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 81 | கலைஞர் நூற்றாண்டு விழா | திருத்தணி 10.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.50 | 60 |
| 82 | கலைச்சங்கமம் | ஆற்காடு (இராணிபேட்டை) 12.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.63 | 26 |
| 83 | ஆடி திருவாதிரை விழா | கங்கை கொண்ட சோழபுரம் (அரியலூர்) 12.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 0.75 | 46 |
| 84 | கலைச்சங்கமம் | வேலூர் 14.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.63 | 38 |
| 85 | சுதந்திர தினவிழா கலை நிகழ்ச்சிகள் | பெரம்பலூர் 15.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சி | 0.50 | 25 |
| 86 | கலைஞர் நூற்றாண்டு விழா | திருவண்ணாமலை 20.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 2.00 | 200 |
| 87 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 28.08.2023 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 3.15 | 100 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 88 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 29.08.2023, 30.08.2023. | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 5.00 | 100 |
| 89 | கலைஞர் நூற்றாண்டு விழா | விழுப்புரம் 30.08.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.00 | 60 |
| 90 | ஓவிய–சிற்பக் கலைப் பயிற்சி முகாம் | ஆற்காடு (இராணிபேட்டை) 02.09.2023, 03.09.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.71 | 110 |
| 91 | கலைஞர் நூற்றாண்டு விழா | தேனி 06.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.00 | 46 |
| 92 | கலைஞர் நூற்றாண்டு விழா | ஈரோடு 12.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.00 | 60 |
| 93 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 14.09.2023 | அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை | 0.50 | 115 |
| 94 | கலைஞர் நூற்றாண்டு விழா | கோயம்புத்தூர் 15.09.2023 | தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர் | 0.50 | 75 |
| 95 | கலைஞர் நூற்றாண்டு விழா | திருவையாறு 21.09.2023 | தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு | 0.50 | 50 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 96 | இளம் கலைஞர்கள் கலைப்போட்டி | கோயம்புத்தூர் 21.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.35 | 15 |
| 97 | கலைஞர் நூற்றாண்டு விழா | களியக்காவிளை (கன்னியாகுமரி) 22.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.00 | 50 |
| 98 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 22.09.2023 | தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, சென்னை | 0.50 | 48 |
| 99 | சுற்றுலா விழா கலை நிகழ்ச்சிகள் | தருமபுரி 27.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 | 15 |
| 100 | உலக சுற்றுலா தினம் | கோயம்புத்தூர் 28.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.20 | 15 |
| 101 | கலைஞர் நூற்றாண்டு விழா | தருமபுரி 29.09.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.00 | 45 |
| 102 | மாநில அளவிலான கைவினைப் பயிற்சி முகாம் | காஞ்சிபுரம் 28.09.2023 முதல் 02.10.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 4.00 | 125 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 103 | சுருளி சாரல் விழா, கலைஞர் நூற்றாண்டு விழா கலை நிகழ்ச்சிகள் | தேனி 29.09.2023 முதல் 01.10.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.00 | 61 |
| 104 | கலைஞர் நூற்றாண்டு விழா | சென்னை 12.10.2023 | தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் | 1.60 | 150 |
| 105 | உலக சுற்றுலா தினம் கலை நிகழ்ச்சிகள் | தருமபுரி 18.10.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.15 | 10 |
| 106 | கலைஞர் நூற்றாண்டு விழா கலை நிகழ்ச்சிகள் | கோயம்புத்தூர் 18.10.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.75 | 40 |
| 107 | புத்தக திருவிழா (மாவட்ட கலை சங்கமம்) | மதுரை 21.10.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.15 | 12 |
| 108 | இராஜராஜன் சதய விழா | தஞ்சாவூர் 25.10.2023, 26.10.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.26 | 57 |
| 109 | புத்தகக் கண்காட்சி கலை நிகழ்ச்சிகள் | உதகை (நீலகிரி) 25.10.2023, 26.10.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.60 | 30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 110 | கலைஞர் நூற்றாண்டு விழா – எழுத்தாளர் கலைஞர் முத்தமிழ் தேர் தொடக்க விழா கலை நிகழ்ச்சிகள் | திருநெல்வேலி தூத்துக்குடி விருதுநகர் 04.11.2023, 05.11.2023 மற்றும் 07.11.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.67 | 79 |
| 111 | கலைஞர் நூற்றாண்டு விழா–ஜவகர் சிறுவர் மன்றம் தொடக்க விழா | திருப்பத்தூர் 09.11.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 0.63 | 25 |
| 112 | கலைஞர் நூற்றாண்டு விழா–முத்தமிழ் தேர் வருகை – கலை நிகழ்ச்சிகள் | மதுரை 09.11.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.56 | 30 |
| 113 | புத்தகத் திருவிழா | விருதுநகர் 16.11.2023 முதல் 21.11.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 1.50 | 67 |
| 114 | கலைஞர் நூற்றாண்டு விழா – முத்தமிழ் தேர் வருகை – கலை நிகழ்ச்சிகள் | கோயம்புத்தூர் 21.11.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 0.25 | 16 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 115 | கலைஞர் நூற்றாண்டு விழா– முத்தமிழ்த்தேர் வருகை – கலை நிகழ்ச்சிகள் | திண்டுக்கல் 24.11.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.63 | 36 |
| 116 | தீப்பாஞ்சியம்மன் கோயில் விழா நிகழ்ச்சிகள் | தருமபுரி 27.11.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.27 | 12 |
| 117 | தமிழிசை விழா | கடலூர் 27.11.2023 | மாவட்ட அரசு இசைப்பள்ளி, கடலூர் | 1.50 | 22 |
| 118 | இளம் தமிழர் பயிற்சி பட்டறை கலை நிகழ்ச்சிகள் | மதுரை 18.12.2023, 19.12.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.50 | 27 |
| 119 | உலக நாடக தின விழா | பர்கூர் (கிருஷ்ணகிரி) 20.12.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 1.50 | 41 |
| 120 | மார்கழி இசை விழா | சேலம் 21.12.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 2.00 | 35 |
| 121 | மாநில அளவிலான குளிர்காலப் பயிற்சி முகாம் | சேலம் 24.12.2023 முதல் 01.01.2024 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 4.00 | 91 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 122 | மார்கழி இசை விழா | சங்கரன் கோயில் (திருநெல்வேலி) 29.12.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.00 | 48 |
| 123 | மார்கழி இசை விழா | மதுரை கும்பகோணம் (தஞ்சாவூர்) 30.12.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை / தஞ்சாவூர் | 4.00 | 87 |
| 124 | உலக சித்தா நாள் | மதுரை 30.12.2023 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.00 | 47 |
| 125 | புத்தகத் திருவிழா | தென்காசி 01.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 0.50 | 15 |
| 126 | மார்கழி இசை விழா | கோயம்புத்தூர் 05.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 2.00 | 58 |
| 127 | அயலகத் தமிழர் தினம் கலை நிகழ்ச்சிகள் | சென்னை 11.01.2024 | கலை பண்பாட்டு இயக்ககம் | 1.50 | 60 |
| 128 | பொங்கல் கலை விழா | திண்டுக்கல் 13.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.30 | 13 |
| 129 | சென்னை சங்கமம்– நம்ம ஊரு திருவிழா | சென்னை 13.01.2024 முதல் 17.01.2024 வரை | கலை பண்பாட்டு இயக்ககம் | 630.00 | 1500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 130 | பொங்கல் கலை விழா | தேனி 15.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.50 | 33 |
| 131 | பொங்கல் கலை விழா | சேலம் 15.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 0.25 | 16 |
| 132 | பொங்கல் கலை விழா | மதுரை 16.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.50 | 18 |
| 133 | பொங்கல் கலை விழா | திருப்பூர் 17.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.00 | 60 |
| 134 | ஏறுதழுவுதல் அரங்கம் – திறப்பு விழா | மதுரை 21.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 0.20 | 15 |
| 135 | கேலோ இந்தியா கலை நிகழ்ச்சி | மதுரை 21.01.2024 முதல் 30.01.2024 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 1.50 | 150 |
| 136 | தைப்பூசத் திருவிழா | திருப்பரங்குன்றம் (மதுரை) 23.01.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 3.00 | 80 |
| 137 | கேலோ இந்தியா கலை நிகழ்ச்சி | கோயம்புத்தூர் 21.01.2024 முதல் 29.01.2024 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 1.40 | 75 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 138 | புத்தகக் கண்காட்சி கலை நிகழ்ச்சிகள் | திருவாரூர் மற்றும் விழுப்புரம் 02.02.2024 முதல் 10.02.2024 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 1.65 | 145 |
| 139 | மார்கழி இசைவிழா | காஞ்சிபுரம் 03.02.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம் | 1.50 | 22 |
| 140 | யுனெஸ்கோ, சென்னையை இசை நகரமாக அறிவித்தமை – இசை விழா கொண்டாடுதல் | சென்னை 05.02.2024 | கலை பண்பாட்டு இயக்ககம் | 1.00 | 15 |
| 141 | கலைச் செம்மல் விருது வழங்கும் விழா | சென்னை 05.02.2024 | கலை பண்பாட்டு இயக்ககம் | 21.85 | 18 |
| 142 | கலைஞர் நூற்றாண்டு விழா பண்பாட்டு பாசறை நிறைவு விழா கலை நிகழ்ச்சி | கடலூர் 10.02.2024 | கலை பண்பாட்டு இயக்ககம் | 29.75 | 48 |
| 143 | கோவை சங்கமம் நம்ம ஊரு திருவிழா | கோயம்புத்தூர் 10.02.2024, 11.02.2024. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், கோயம்புத்தூர் | 39.00 | 356 |
| 144 | மதுரை சங்கமம் நம்ம ஊரு திருவிழா | மதுரை 18.02.2024, 19.02.2024. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை | 38.50 | 385 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 145 | சேலம் சங்கமம் நம்ம ஊரு திருவிழா | சேலம் 26.02.2024, 27.02.2024. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், சேலம் | 36.00 | 375 |
| 146 | ஆழித் தேரோட்டம் | திருவாரூர் 21.03.2024 | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர் | 0.82 | 74 |

## தஞ்சாவூர் தென்னக பண்பாட்டு மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் (2023–2024)

| வ எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்த்தில்) | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | வில்லிசை கலைவிழா | திருநெல்வேலி 27.09.2023 | தென்னக பண்பாட்டு மையம் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.00 | 42 |
| 2 | மார்கழி இசை விழா | ஸ்ரீரங்கம் (திருச்சி) 20.12.2023 முதல் 22.12.2023 வரை | தென்னக பண்பாட்டு மையம் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி | 1.50 | 18 |
| 3 | திருப்பாவை விழா | ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர்) 09.01.2024 | தென்னக பண்பாட்டு மையம் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.00 | 49 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | குமரி கலை விழா | கன்னியாகுமரி 13.01.2024 முதல் 17.01.2024 வரை | தென்னக பண்பாட்டு மையம் மற்றும் மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி | 2.00 | 77 |

## மாநிலங்களுக்கிடையேயான கலை நிகழ்ச்சிகள் (2023–2024)

| வ எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்த்தில்) | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | வைகாசிப் பெருவிழா | சண்டிகர் 24.05.2023 முதல் 27.05.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம். | 3.00 | 19 |
| 2 | தசரா விழா | குல்லு (இமாச்சல பிரதேசம்) 25.10.2023, 26.10.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், தஞ்சாவூர். | 4.51 | 26 |
| 3 | தேசிய லோக்ராங் கலை திருவிழா | ஜெய்ப்பூர் 29.10.2023 முதல் 8.11.2023 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருநெல்வேலி. | 4.47 | 24 |
| 4 | தமிழ்ச் சங்கத்தின் 5ஆம் ஆண்டு விழா | தெலுங்கானா 24.12.2023, 25.12.2023. | மண்டலக் கலை பண்பாட்டு மையம், காஞ்சிபுரம். | 3.56 | 31 |
| 5 | பொங்கல் கலைவிழா | புதுதில்லி 13.01.2024 முதல் 16.01.2024 வரை | மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை. | 2.70 | 15 |

## அயல்நாடுகளில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் (2023-2024)

| வ எண் | நிகழ்வு | நிகழ்விடம் & நாள் | நிகழ்த்துனர் | தொகை (ரூ. இலட்த்தில்) | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீமகா மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழா | மலேசியா தலைநகர் கோலாலம்பூர் 23.06.2023 முதல் 25.06.2023 வரை | கலை பண்பாட்டு இயக்ககம் | 9.00 | 13 |
| 2 | அமெரிக்க தமிழ்ச் சங்கம் கலை நிகழ்ச்சி | அமெரிக்கா 01.07.2023, 02.07.2023 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் | 27.5 | 11 |

## மாவட்ட கலை விருதுகள் (2023-2024)

| வ எண் | மண்டலங்கள் | மாவட்டம் | விருதுக்கான வருடம் | தொகை (ரூ. இலட்சத்தில்) | விருது பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | சென்னை | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | செங்கல்பட்டு | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | திருவள்ளூர் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | இராணிப்பேட்டை | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | திருப்பத்தூர் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | திருவண்ணாமலை | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தஞ்சவூர் | திருவாரூர் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | நாகப்பட்டிணம் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | கடலூர் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | விழுப்புரம் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | கள்ளக்குறிச்சி | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| 3 | சேலம் | சேலம் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| 4 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | நீலகிரி | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| 5 | மதுரை | திண்டுக்கல் | 2021-2022<br>2022-2023<br>2023-2024 | 4.20 | 45 |
| | | தேனி | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | சிவகங்கை | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| 6 | திருச்சி | பெரம்பலூர் | 2021-2022 | 2.10 | 15 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | திருநெல்வேலி | **விருதுநகர்** | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | **கன்னியாகுமரி** | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | **தென்காசி** | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |
| | | **தூத்துக்குடி** | 2022-2023<br>2023-2024 | 4.20 | 30 |



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 'சென்னை சங்கமம்–நம்ம ஊரு திருவிழா' என்ற பிரமாண்ட நாட்டுப்புறக் கலை விழா 13.01.2024 அன்று சென்னை தீவுத்திடல் மைதானத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்/பல்கலைக்கழக வேந்தர் அவர்களால் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் படித்த 3448 மாணாக்கர்களுக்கு பட்டங்கள் 21.11.2023 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டன.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்/ பல்கலைக்கழக வேந்தர் அவர்களால் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் திரைப்படப் பின்னணி பாடகி பத்ம பூஷன் விருது பெற்ற கலைமாமணி பி.சுசிலா, இசையியல் அறிஞர் கலைமாமணி தஞ்சாவூர் பி.எம்.சுந்தரம் ஆகியோருக்கு 'மதிப்புறு முனைவர்' பட்டம் 21.11.2023 அன்று வழங்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் ரூ. 14.85 கோடி மதிப்பிலான கூடுதல் கட்டடம் காணொலி காட்சி மூலம் 08.03.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது.




பாரம்பரிய இசை நகரமாக சென்னையை யுனெஸ்கோ அறிவித்ததைக் கொண்டாடும் விதமாக ஆண்டுதோறும் நடத்தப்படும் இசை விழா இவ்வாண்டு 05.02.2024 அன்று சென்னை இசைக்கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் பத்மஸ்ரீ விருதாளர் கலைமாமணி வலையப்பட்டி ஏ. ஆர். சுப்பிரமணியம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கலைமாமணி விருது பெற்ற 10 மூத்த கலைஞர்களுக்கு தலா ரூ. 1,00,000/–மதிப்பிலான பொற்கிழி, ரொக்க பரிசாக தலைமைச் செயலகத்தில் 29.09.2023 அன்று வழங்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 500 கிராமியக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள் மற்றும் ஆடை, அணிகலன்கள் வாங்கிட ரூ. 10,000/– நிதியுதவிக்கான காசோலை மற்றும் 1000 மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ. 3000/– நிதியுதவிக்கான ஆணைகள் 29.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி தொடங்கி வைக்கப்பட்டது.




சென்னையில் நடைபெற்ற ஜி–20 மாநாட்டின் போது கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் 24.07.2023 அன்று கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறை அமைச்சர் அவர்களும் ரூ. 1.60 கோடி மதிப்பிலான கடலூர், மாவட்ட அரசு இசைப் பள்ளியின் புதிய கட்டடத்தை 27.11.2023 அன்று திறந்து வைத்தார்கள்.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் மாநில அளவிலான ஓவிய–சிற்பக் கலைக்காட்சியினை 10.10.2023 அன்று சென்னை அருங்காட்சியகத்தில் தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள்.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் 2021–2022 முதல் 2023–2024 வரையிலான ஆண்டுகளுக்குரிய 'கலைச்செம்மல்' விருது 18 கலைஞர்களுக்கு 05.02.2024 அன்று வழங்கப்பட்டது.




தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் 29.04.2023 முதல் 21.05.2023 வரை நடத்தப்பட்ட சென்னை விழாவில் கலை பண்பாட்டுத் துறை சார்பாக கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.




தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் உலக நாட்டியத் தினத்தைக் கொண்டாடும் வகையில் நாட்டிய விழா 19.08.2023 அன்று சென்னையில் நடைபெற்றது.




2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு நிகழ்வில், சென்னையில் 28 இடங்களில் 300–க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் 09.01.2024 அன்று நடத்தப்பட்டன.



2022–2023 ஆம் ஆண்டு மானியக்கோரிக்கை அறிவிப்பின்படி, சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி செயல்படும் பாரம்பரியக் கட்டடமான 'பிராடிகேசில்' ரூ. 2.80 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளது.

# அருங்காட்சியகங்கள் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2024-2025

## 2. முன்னுரை

தமிழ்நாடு பாரம்பரியம், பண்பாடு மற்றும் தொன்மைமிகு மரபுகளைக் கொண்டுள்ளது. இந்த வண்ணமயமான பண்பாட்டுப் பாரம்பரிய முறைகளைப் பாதுகாத்து காட்சிப்படுத்தும் களஞ்சியமாக அருங்காட்சியகங்கள் விளங்குகின்றன. அரும்பொருட்களை சேகரித்து, பாதுகாத்து ஆவணப்படுத்துதலுடன் காட்சியமைத்தல் அருங்காட்சியகத்தின் முக்கியப் பணியாகும். இதன் மூலம், வருங்கால சந்ததியினருக்கு கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டை வளர்க்கும் மையங்களாக அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன. பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் சான்றாவணங்கள் மற்றும் காட்சியமைப்பு மூலமாக விளக்கங்களையும் தகவல்களையும் அளித்து,

சிறந்த பொழுது போக்காகவும் சிறப்பான அறிவாற்றலை வளர்க்கக்கூடிய மையங்களாகவும் அருங்காட்சியகங்கள் திகழ்கின்றன.

சென்னையில் பல வகையான அருங்காட்சியகங்கள் உள்ளன. அவற்றுள், குறிப்பிட்ட பொருண்மையைச் சார்ந்த பல வகையான அருங்காட்சியகங்கள் அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆனால், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பல்வேறு பொருண்மைகளை அடிப்படையாகக் கொண்டு பண்பாடு, இயற்கை, அறிவியல் சார்ந்த அரும்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாக செயல்பட்டு வருகிறது.

சென்னை அரசு அருங்காட்சியகம், தொல்லியல், மானுடவியல், கலை, நாணயவியல், தாவரவியல், விலங்கியல், புவியியல், சிறுவர் அருங்காட்சியகம், வேதியியப் பாதுகாப்புப் பிரிவு,

கல்விப் பிரிவு மற்றும்  வடிவமைப்புப் பிரிவு ஆகிய 11 பிரிவுகளைக் கொண்டது. அருங்காட்சியகத்தின் அடிப்படை நோக்கம் அனைத்து வகையான அரும்பொருட்களையும் சேகரித்து, பாதுகாத்து பார்வையாளர்களுக்கு பயன்தரும் வகையில் காட்சிப் படுத்துவதாகும். குறிப்பாக, அருங்காட்சியகங்கள் துறை மாநிலத்தின் தொல்பொருட்கள் மீது அதிக கவனம் செலுத்தி வருகிறது. மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆண்டு முழுவதும், பலவகைப்பட்ட புதைபொருட்களை பெற்று வருகிறது. இத்தகைய அரும்பொருட்கள் ஒன்றரை நூற்றாண்டுக்கும் மேலாக தொடர்ந்து சேகரிக்கப்பட்டு சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் பிற மாவட்ட அருங்காட்சியகங்களில் பாதுகாக்கப்பட்டும் காட்சிப்படுத்தப்பட்டும் வருகின்றன.

## 2.1 அருங்காட்சியகங்களின் நோக்கங்கள்

அருங்காட்சியகங்கள் அரும்பொருட்களை சேகரித்து, பாதுகாப்பதோடு வருகை தரும் பார்வையாளர்களுக்கு நம் பண்பாடு மற்றும் வரலாற்றைப் பற்றி உரிய காட்சியமைப்பின் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அருங்காட்சியகங்கள் துறையின் நோக்கம் மற்றும் பணிகள் பின்வருமாறு :


1. அரும்பொருட்களை சேகரித்து ஆவணப்படுத்துதல்

   (புதையல், களசேகரிப்பு மற்றும் நன்கொடை)
2. வருங்கால சந்ததியினருக்காக காட்சிப் பொருட்களை பாதுகாத்தல்
3. சேகரிப்புகளை பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்துதல்
4. கண்காட்சிகள் மற்றும் சிறப்புக் கண்காட்சிகள் நடத்துதல்

5. ஆராய்ச்சிகள் மேற்கொண்டு அதை பார்வையாளர்களுக்குத் தெரிவித்தல்
6. கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

## 2.2 நிருவாகக் கட்டமைப்பு

அருங்காட்சியகங்கள் துறை, அருங்காட்சியகங்களின் ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்களுடன் செயல்பட்டு வருகிறது. அருங்காட்சியகங்கள் துறை இரண்டு உதவி இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், காப்பாட்சியர்கள், உதவிக் காப்பாட்சியர்கள், விளக்குநர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், காட்சிக்கூடக் காவலர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.


அரசுஅருங்காட்சியகங்கள் துறை
ஆணையர்
உதவிஇயக்குநர் (தொழில்நுட்பம்)
உதவிஇயக்குநர் (நிர்வாகம்)
முதன்மைக் கணக்கு அலுவலர்
காப்பாட்சியர்கள் சென்னைஅரசு அருங்காட்சியகம்
காப்பாட்சியர்கள் மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்
கண்காணிப்பாளர் (பொதுமற்றும் பணியமைப்பு பிரிவு)
கண்காணிப்பாளர் (பட்டிப்பிரிவு)
உதவிக் காப்பாட்சியர்கள் காட்சிக்கூட விளக்குநர்கள், ஓவியர்தரம்–1, தச்சர், போலிஉயிரினம் ஆக்குநர், தொழில்நுட்ப உதவியாளர், ஆய்வக உதவியாளர், புகைப்படக் கலைஞர் அச்சகப் பிரிவு பணியாளர்
உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், காட்சிக் கூடக் காவலர்கள், காவலர்கள், தோட்டக்காரர்
உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தலைமை சேவகர், நுழைவுச்சீட்டு பரிசோதகர், காட்சிக்கூடக் காவலர், காவலர்கள், தோட்டக்காரர்கள், துப்புரவாளர்கள்
மேல்நிலைக் கணக்கர், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர், நுழைவுச்சீட்டு விற்பனை பணியாளர், புத்தக விற்பனை– பணியாளர்

### 2.3 சென்னை அரசு அருங்காட்சியகம்

இந்தியாவின் இரண்டாவது பழமையான அருங்காட்சியகமான சென்னை அரசு அருங்காட்சியகம் 1851–ஆம் ஆண்டில் ஆங்கிலேய அதிகாரி சர்ஜன் எட்வர்ட் பால்ஃபர் அவர்களால் தொடங்கப்பட்டது. இந்த அருங்காட்சியகத்தில், தொடக்க காலத்தில் ஒரு விலங்கியல் பூங்கா மற்றும் ஒரு மீன் காட்சியகமும் இருந்தது.

சென்னை அரசு அருங்காட்சியகம் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயல்படுகிறது. வெள்ளிக் கிழமை வார விடுமுறை நாளாகும். தேசிய விடுமுறை நாட்களான குடியரசு தினம், சுதந்திர தினம் மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய மூன்று நாட்களைத் தவிர அனைத்து அரசு விடுமுறை நாட்களிலும் இயங்கி வருகிறது. மாவட்ட அரசு அருங்காட்சியகங்களும் அவ்வாறே செயல்பட்டு வருகின்றன. சென்னை அரசு அருங்காட்சியகத்தைப் பார்வையிட இந்தியர்களுக்கு

ரூ.15, அயல்நாட்டினருக்கு ரூ.250 என நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பள்ளி மாணவர்களுக்கு சலுகைக் கட்டணமாக ரூ. 5 மட்டும் வசூலிக்கப்படுகிறது.

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் தேசியக் கலைக்கூடத்தின் எதிரில், தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் அவர்களின் திருஉருவச் சிலை 15.08.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது, இவ்வருங்காட்சியகம் தமிழர்களின் உலோக வார்ப்புக் கலைக்கு சான்றுகூறும் விதமாக பல்லவர், சோழர் மற்றும் விஜயநகர கால படிமங்கள் படிமக் கூடத்தில் காட்சியில் உள்ளன. மேலும், அமராவதி சிற்பங்கள், தஞ்சாவூர் ஆயுதங்கள், இராஜா இரவிவர்மா ஓவியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், உரோமானிய நாணயங்கள், பேரரசர்கள் முதலாம் இராஜராஜன் மற்றும் முதலாம்

குலோத்துங்கனின் நாணயங்கள் போன்ற தொல்பொருட்களின் சிறந்த சேகரிப்புகளைக் கொண்ட ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாக செயல்பட்டு வருகிறது. இங்கு கலை மற்றும் இயற்கை அறிவியல் சார்ந்த அரும்பொருட்கள் ஐம்பத்தேழு காட்சிக் கூடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சென்னை அரசு அருங்காட்சியகம் ஏழு கட்டடங்களில் மூன்று, இந்தோ–சராசனிக் கட்டடக்கலையில் அமைந்த பாரம்பரியக் கட்டடங்களாகும். தொல்லியல், நாணயவியல், கலை, மானுடவியல், புவியியல், தாவரவியல், விலங்கியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகம் தொடர்பான காட்சிக் கூடங்களும் கல்விப் பிரிவு, வேதியியப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் வடிவமைப்புப் பிரிவுகள் உள்ளன.

பாந்தியன் கட்டடம் 1780–ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இக்கட்டடம் சிறு கிரேக்க கட்டடக் கலைக் கூறுகளைக் கொண்டுள்ளது. இந்த கட்டடம் ஆரம்ப காலத்தில் அரசு அலுவலகமாகவும், நடன அரங்கமாகவும் இருந்தது. சென்னை நகரத்தின் பழமையான கட்டடங்களுள் ஒன்றாக விளங்கும் பாந்தியன் கட்டடத்தில் 1854–ஆம் ஆண்டு முதல் அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது.

**தொல்லியல் பிரிவு**

தொல்லியல் பிரிவில் கற்சிற்பங்கள் பல்லவர், சோழர், விஜயநகர மற்றும் நவீன காலம் என கால வரிசைப்படி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர, தற்போதைய பாகிஸ்தான் பெஷாவர் பகுதியிலிருந்து பெறப்பட்ட காந்தாரக் கலை சிற்பங்கள் சிறப்பு வாய்ந்தன. மேலும், இங்கு பல்வேறு அரசர்களால் வெளியிடப்பட்ட செப்பேடுகள் குறிப்பாக கூரம், திருஇந்தளூர், கரந்தை செப்பேடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

படிமக் கூடத்தில் சிறப்பு வாய்ந்த அர்த்தநாரீஸ்வரர் படிமம், நடராஜர் படிமங்கள் உள்ளிட்ட பல்லவர், சோழர், விஜய நகர கால படிமங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. 1963–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட படிமக் கூடத்தில் உள்ள உலகப் புகழ் வாய்ந்த படிமங்கள் வெளிநாட்டுப் பயணிகளை கவரும் வண்ணம் உள்ளது.

உலோக வார்ப்புக் கலையில் ஐந்து உலோகங்கள் கொண்ட கலவையில் படிமங்கள் வார்க்கப்படுகின்றன. இதில், சோழர் கால படிமங்கள் கலைத் தன்மையும் அழகும் மிக்கவையாக விளங்குகின்றன. குறிப்பாக, நாகப்பட்டினத்தில் கிடைத்த பௌத்த படிமங்கள் புத்தரின் பல்வேறு தோற்றங்களை காட்டுகிறது. திருவாலங்காட்டில் கிடைத்த எழில்மிக்க சோழர்கால நடராஜர் படிமம், மதுரை பொருப்பு மேட்டுப்பட்டியில் கிடைத்த கால்மாறி ஆடிய பாண்டியர் கால நடராஜர் படிமம் ஆகியன சிறப்பான சேகரிப்புகள் ஆகும். மேலும்

வடக்குப் பனையூரில் கிடைத்த இராமர், இலக்குவன், சீதை படிமங்கள், சிவகங்கை மாவட்டத்தில் கிடைத்த வரதராஜர் படிமம் ஆகியன குறிப்பிடத்தக்க சேகரிப்புகளாகும்.

**நாணயவியல் பிரிவு**

படிமக் கூடத்தில் சிறிய இடத்தில் செயல்பட்டு வந்த நாணயவியல் பிரிவு 2017–ஆம் ஆண்டு ஒரு தனிக் கட்டடத்திற்கு மாற்றியமைக்கப்பட்டது. இப்பிரிவு, முத்திரை நாணயங்கள் முதல் சுதந்திர இந்தியாவின் நாணயங்கள் வரை இரண்டாயிரம் ஆண்டு கால தொடர்ச்சியான இந்திய நாணயவியலை எடுத்துக் கூறும் வகையில் உள்ளது. நாணயவியல் பிரிவில் சங்க காலம் மற்றும் உரோமானியர்களால் வெளியிடப்பட்ட அரிய நாணயங்கள், சோழர், பல்லவர், பாண்டியர் கால நாணயங்கள், சீன நாட்டு நாணயங்கள், பல்வேறு போர்களில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள், 'மகா சாசனம்' என வழங்கப்படும் மேக்னகார்டாவின்

ஒரே ஒரு பிரதி, ரூபாய் நோட்டுகள், பல்வேறு நாட்டு அஞ்சல் தலைகள் ஆகியன காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**கலைப் பிரிவு**

தேசிய கலைக்கூடக் கட்டடம் 1906–ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தோ–சராசானிக் பாணியிலான கட்டடம் ஆகும். முகலாயர் கட்டடக் கலையின் 'புலந்தர்வாசா'வை நினைவு கூறும் வகையில் இதன் முகப்புத் தோற்றம் அமைந்துள்ளது. சிவப்பு நிற மணற் கற்களால் எழிலான தோற்றத்துடன் இந்த கட்டடம் காட்சியளிக்கின்றது. இக்கட்டடம் ரூ.12 கோடி செலவில் புத்தாக்கம் செய்யப்பட்டு 06.02.2024 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தேசிய கலைக்கூடத்தில் இராஜா இரவிவர்மா ஓவியங்கள், தஞ்சாவூர் ஓவியங்கள், கண்ணாடி ஓவியங்கள், மைசூர் ஓவியங்கள்,

முகலாயர் ஓவியங்கள், காங்ரா ஓவியங்கள் மட்டுமல்லாமல் தந்தத்தினால் செய்யப்பட்ட அரிய சிற்பங்கள், மரப் பேழைகள், தேர் சிற்பங்கள் ஆகியன பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வளர்கலைக் கூடத்தில் புகழ்வாய்ந்த பல்வேறு ஓவியர்கள் வரைந்த எண்ணெய் மற்றும் நீர் வண்ண ஓவியங்கள் (Oil and Water Painting) உள்ளன. வளர்கலைக் கூடத்தின் தரைத்தளம் தற்போது கண்காட்சி அரங்காக செயல்பட்டு வருகிறது. இதில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கண்காட்சி, இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் தொடர்புடைய கண்காட்சி, பள்ளி மாணவர்களின் ஓவியக் கண்காட்சி போன்ற கண்காட்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**மானுடவியல் பிரிவு**

மானுடவியலுக்கென இரண்டு தளங்களைக் கொண்ட பாரம்பரியக் கட்டடம் உள்ளது. இதில், தொன்மை புகழ் வாய்ந்த ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு அரும்பொருட்கள், நீலகிரி சுடுமண் பொருட்கள், தஞ்சாவூர் ஆயுத சாலை ஆயுதங்கள், போர்க் கருவிகள், பீரங்கிகள் தரைத் தளத்தில் உள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாக ஆதிச்சநல்லூரில்தான் 1904–ஆம் ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவ்வகழாய்வில் கிடைத்த முதுமக்கள் தாழிகள், தங்க நெற்றிப் பட்டைகள் (Diadems), இரும்பிலான வாட்கள் மற்றும் விவசாயக் கருவிகள் ஆகியன குறிப்பிடத்தக்க அரும்பொருள்கள் ஆகும். இசைக் கருவிகள், பழங்குடியினரின் புழங்குபொருட்கள் ஆகியன மேல்தளத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முதல் தளத்தில், சிந்து சமவெளி நாகரிக அரும்பொருட்கள், கதகளி பொம்மைகள், நேர்ச்சைப் பொருட்கள் ஆகியன காட்சியில் உள்ளன.

**புவியியல் பிரிவு**

புவியியல் பிரிவில், இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் உயிர் வாழ்ந்து மறைந்த விலங்குகளின் புதையுயிரி படிவங்கள், பாறை மற்றும் கனிம வகைகள், சிறுவர்களைக் கவருகின்ற வகையில் டைனோசரின் இயங்கு மாதிரி, பேசும் மரம் ஆகியன உள்ளன. மேலும், விண்கற்கள், தங்கம், வெள்ளி, செம்பு போன்றவற்றின் கனிமங்கள் வைரம், நீலம் போன்ற விலை உயர்ந்த கற்கள் பொதுமக்கள் பார்வைக்காக காட்சியில் உள்ளன.

**தாவரவியல் பிரிவு**

தாவரவியல் பிரிவில் ஆறு அடி உயரம் கொண்ட 500 ஆண்டு கால தேக்கு மரத்தின் குறுக்கு வெட்டு தோற்றம் மர வளையங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அரிய தாவரங்கள், வாசனைப் பொருட்கள், உணவு தானியங்கள் ஆகியவை பதப்படுத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும், சந்தன மரம் மற்றும் பல்வேறு வணிகப் பயன்பாட்டிற்குரிய மர வகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**விலங்கியல் பிரிவு**

1874–ஆம் ஆண்டு மங்களூரில் கரை ஒதுங்கிய 60 அடி நீலத் திமிங்கிலத்தின் பதப்படுத்தப்பட்ட எலும்புக் கூடு, 1888–ஆம் ஆண்டு அமிர்தி வனப் பகுதியைச் சேர்ந்த 11 அடி உயர யானையின் எலும்புக் கூடு, பறவைகள் மற்றும் அற்றுப் போன பறவைகள், பாலூட்டிகள், விஷம் கொண்ட மற்றும் விஷமற்ற பாம்புகள், முதலை போன்ற ஊர்வனங்கள், கடல் பாம்புகள், யானையின் வளர்ச்சியடைந்த கரு போன்றவையும் விலங்கியல் பிரிவில் காண்போர்களை கவரும் வண்ணம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**சிறுவர் அருங்காட்சியகம்**

சிறுவர்களுக்கென பிரத்யேகமாக 1988–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்ட சிறுவர் அருங்காட்சியக தரை தளத்தில், இந்திய மற்றும் பல்வேறு வெளிநாட்டு மக்களின் உடையலங்கார

பொம்மைகள் சூழலியல் காட்சிப்பெட்டிகளாக அவற்றின் சிறப்புகளை சித்தரிக்கும் வகையில் காட்சியமைக்கப்பட்டுள்ளன. முதல் தளத்தில் அறிவியல் தொடர்பான காட்சியமைப்புகள், இயங்கு மாதிரிகள் மற்றும் ஒரு முப்பரிமாண காட்சியரங்கம் சிறார்களை ஈர்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. அடித்தளப் பகுதியில் இயற்பியல் தொடர்பான இயங்கும் மாதிரிகள் ஒவ்வொரு காட்சிப்பெட்டியிலும் பொருத்தப்பட்டு அதன் கோட்பாடுகளை சிறுவர்கள் எளிதில் அறியும் வண்ணம் காட்சியமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள 23 இயங்கும் மாதிரிகள், மாணவர்கள் விளையாடும்போதே அறிவியலை அறியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

**கல்விப் பிரிவு**

அருங்காட்சியகத்தின் கல்விப் பிரிவு, சொற்பொழிவுகள், கல்லூரி மாணவர்களுக்கு உள்விளக்கப் பயிற்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடத்தி வருகிறது.

**வேதியியப் பாதுகாப்புப் பிரிவு**

அருங்காட்சியக அரும்பொருட்களைப் பாதுகாக்க வேதியியப் பாதுகாப்பு ஆய்வகம் 1930–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது அருங்காட்சியகங்களில் உள்ள தொல்பொருட்களை பாதுகாப்பதற்காக இந்தியாவிலேயே முதன் முதலாக தொடங்கப்பட்டதாகும். இங்கு புதையலாக கிடைக்கும் படிமங்கள், நாணயங்கள், தூய்மை செய்யப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. மேலும், ஓலைச் சுவடிகள், ஓவியங்கள், காகித ஆவணங்கள் வேதியிய முறையில் பாதுகாக்கப்படுகின்றன.

**வடிவமைப்புப் பிரிவு**

அருங்காட்சியகத் துறையின் கீழ் அமைந்துள்ள சென்னை மற்றும் மாவட்ட அருங்காட்சியக காட்சியமைப்புப் பணிகள் மற்றும் ஊடாடும் காட்சியமைப்புகளை நிறுவும் பணிகள் வடிவமைப்புப் பிரிவால் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படுகின்றன.

**அருங்காட்சியகக் கலையரங்கம்**

அருங்காட்சியகக் கலையரங்கம் இலண்டனில் உள்ள குளோப் தியேட்டர் போன்று அரைவட்ட வடிவில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கலையரங்கம் புகழ்பெற்ற ஆங்கிலேய கட்டடக் கலைஞர் இர்வின் அவர்களால் வடிவமைக்கப்பட்டு, 1890–ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அருங்காட்சியகக் கலையரங்கம் அழகிய நீண்ட படிக்கட்டுகளையும் வளைவுகள் கொண்ட முகப்புத் தோற்றத்தையும் பெற்றுள்ளது. இந்தக் கலையரங்கத்தின் கூரைப்பகுதி சேதம் அடைந்ததைத் தொடர்ந்து, பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்

அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. முற்றிலும் குளிர்பதனம் செய்யப்பட்ட இந்த அரங்கம் 450 இருக்கைகள் கொண்டதாக சீரமைக்கப்பட்டுள்ளது. இங்கு நடனம், இசை, நாடகம், சொற்பொழிவு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற நான்கு மணி நேரத்திற்கு ரூ.25,000/– கட்டணமாக செலுத்தி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் நடத்தி வருகின்றனர்.

### 2.3.1 சென்னை அரசு அருங்காட்சியகத்தில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகள்

- சென்னை அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தை சீரமைத்து மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.3.40 கோடி (ரூபாய் மூன்று கோடியே நாற்பது இலட்சம்) அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் நிறைவுற்று, 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள பழமையான கட்டடத்தை சீரமைத்து பாரம்பரிய உணவகம் அமைக்க ரூ.2.81 கோடி (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தியொரு இலட்சம்) அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் நிறைவுற்று, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் 06.02.2024 அன்று திறந்து வைக்கப்பட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் உணவகம் நடத்தப்பட்டு வருகிறது.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் அருங்காட்சியகத் துறைக்கான புதிய நிருவாகக் கட்டடம் கட்டவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளவும் ரூ.4.80 கோடி (ரூபாய் நான்கு கோடியே எண்பது இலட்சம்) அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

- சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள தேசிய கலைக்கூடத்தின் மீது ரூ.5 கோடி (ரூபாய் ஐந்து கோடி) செலவில் முப்பரிமாண லேசர் கண்காட்சி அமைக்கும் பணிக்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கி, ஆரம்பக் கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பாரம்பரிய பாந்தியன் கட்டட சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிக்கு அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, ரூ.5.41 கோடி (ரூபாய் ஐந்து கோடியே நாற்பத்தொரு இலட்சம்) செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னை அரசு அருங்காட்சியக வளாக பாரம்பரியமிக்க சுற்று சுவரை பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகள் ரூ.45 இலட்சம் (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம்) செலவில் பணிகள் நிறைவடைந்துள்ளன.
- சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான

விருப்புரிமை நிதியில் வழங்கப்பட்ட ரூ.25 இலட்சத்தில் ரூ.19 இலட்சத்திற்கு 12 ஆங்கிலேய ஆளுநர் ஓவியங்கள் சீரமைக்கப்பட்டு தேசிய கலைக் கூடத்தில் நவீன முறையில் காட்சியமைக்கப்பட்டுள்ளன. ரூ.6 இலட்சத்திற்கு தேசிய கலைக் கூடத்தின் அருகில் உள்ள கழிவறையினை புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.3.2. சுதந்திர தின அருங்காட்சியகம்

75 ஆவது சுதந்திர தினத்தினை கொண்டாடும் வகையில், 2022 ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் விடுதலைப் போராட்டங்களில் தமிழ்நாட்டின் பங்களிப்பை போற்றும் வகையில், சென்னையில் சுதந்திர தின அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. சென்னை, சேப்பாக்கம், மெரினா கடற்கரையில் அமைந்துள்ள 250 ஆண்டுகள் பழமை வாய்ந்த

ஹுமாயுன் மஹால் பொதுப்பணித் துறையால் (பாரம்பரிய கட்டடப் பிரிவு) மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. இந்த புதுப்பிக்கப்பட்ட ஹுமாயுன் மஹாலில், சிறப்பு வாய்ந்த சுதந்திர தின அருங்காட்சியகத்தை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.50 இலட்சத்திற்கு அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**2.4. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள்**

அருங்காட்சியகங்கள் துறையின் கீழ் புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், ஈரோடு, கடலூர், நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, சிவகங்கை, திருவாரூர், பழனி (திண்டுக்கல்), நாகப்பட்டினம், காஞ்சிபுரம், இராமநாதபுரம், கரூர், விருதுநகர், அரியலூர், ஆண்டிப்பட்டி (தேனி) மற்றும் திருவண்ணாமலை ஆகிய 23 மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றுள் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கடலூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள அரசு அருங்காட்சியகங்கள் பாரம்பரியமிக்க புராதனக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**அரசு அருங்காட்சியகம், புதுக்கோட்டை**

புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகம் 1910–ஆம் ஆண்டு புதுக்கோட்டை தொண்டைமான் அரசர்களால் அவர்களது வேனிற் கால மாளிகையில் தொடங்கப்பட்டது. இக்கட்டடம் ஒரு ஏக்கர் பரப்பளவில் அமைந்த 24,000 சதுர அடி கொண்ட கட்டடம் ஆகும். நாடு விடுதலை பெற்ற பின் புதுக்கோட்டை சமஸ்தானம் 03.03.1948 அன்று இந்தியாவுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவ்வருங்காட்சியகம் அருங்காட்சியகங்கள் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு, மாநிலத்தின் இரண்டாவது பெரிய அருங்காட்சியகமாகத் திகழ்கின்றது.

இவ்வருங்காட்சியகத்தில் மாவட்டத்தின் தொன்மை வாய்ந்த பெருங்கற்கால வரலாற்று சான்றாதாரங்கள், பாறை ஓவியங்கள், சமணப் படுக்கைகள், தமிழிக் கல்வெட்டுகள் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி 6,356 அரும்பொருட்கள் காட்சியமைக்கப்பட்டுள்ளன. இப்பாரம்பரியக் கட்டடத்தை பழமை மாறாமல் மீட்டுருவாக்க முதற்கட்டப் பணிகள் ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி) செலவில் நிறைவடைந்துள்ளன.

**அரசு அருங்காட்சியகம், திருச்சிராப்பள்ளி**

அரசு அருங்காட்சியகம், திருச்சிராப்பள்ளி 1983–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. தற்பொழுது இவ்வருங்காட்சியகம், உச்சிப் பிள்ளையார் கோவிலுக்கு எதிரில் அமைந்துள்ள பழைய கோட்டையில் உள்ள ராணி மங்கம்மாள் தர்பார் மண்டபக் கட்டடத்தில் 1997–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் சிறப்புகளை எடுத்தியம்பும் வகையில்

966 அரும்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இப்பாரம்பரியக் கட்டடத்தை பழமை மாறாமல் மீட்டுருவாக்க முதற்கட்டப் பணிகள் ரூ.1.83 கோடி (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி மூன்று இலட்சம்) செலவில் நிறைவடைந்துள்ளன.

திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில் புதியதாக அமையவுள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் 5 ஏக்கர் நிலம் அருங்காட்சியகத்திற்கென அடையாளம் காணப்பட்டுள்ளது.

**அரசு அருங்காட்சியகம், திருநெல்வேலி**

அரசு அருங்காட்சியகம், திருநெல்வேலி 1992–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. தற்பொழுது இவ்வருங்காட்சியகம் பாளையங்கோட்டையின் ஒரு பகுதியான பாரம்பரிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டு தொல்லியல், மானுடவியல், இயற்கை அறிவியல், ஓவியங்கள், வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட வாள், ஊமைத் துரை சிறை

வைக்கப்பட்ட அறையில் ஊமைத் துரை காட்சிக் கூடம் மற்றும் ஒலி ஒளி காட்சியும் காட்சியமைக்கப்பட்டுள்ளன. இப்பாரம்பரியக் கட்டடத்தை பழமை மாறாமல் மீட்டுருவாக்குவதில் முதற்கட்டப் பணிகள் ரூ.1.13 கோடி (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சம்) செலவில் நிறைவடைந்துள்ளன.

**அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம்**

அரசு அருங்காட்சியகம், உதகமண்டலம் 1990–இல் தொடங்கி வைக்கப்பட்டு பின்னர் உதகமண்டலத்தை நிறுவிய ஆட்சியர் ஜான் சலிவன் அவர்களால் கட்டப்பட்ட முதல் கல் கட்டடத்திற்கு (Stone House) மாற்றி காட்சியமைப்புகள் மேம்படுத்தப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தின் சிறப்புகள் மற்றும் இயற்கை சூழல் தொடர்பான இதரக் காட்சியமைப்புகள், மலைவாழ் மக்கள் தொடர்பான

சேகரிப்புகள் மற்றும் காட்சியமைப்புகள் இவ்வருங்காட்சியகத்தின் சிறப்பாகும். காட்சியமைப்புப் பணிகள் முதற்கட்டமாக ரூ.55 இலட்சம் (ரூபாய் ஐம்பத்தைந்து இலட்சம்) செலவில் நிறைவடைந்துள்ளன.

**அரசு அருங்காட்சியகம், சேலம்**

சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் 1976–ஆம் ஆண்டு அப்போதைய சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. 1979–ஆம் ஆண்டு முதல் அருங்காட்சியகத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. சேர்வராயன் மலை மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட புதிய கற்கால கருவிகள், முதுமக்கள் தாழிகள், வீரக்கற்கள், ஏறுதழுவுதல் கற்சிற்பம், மைல்கல், குறுநில மன்னர்களின் கற்சிற்பம் மற்றும் நாமக்கல் கவிஞர் அவர்கள் பயன்படுத்திய உடமை பொருட்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டு சேலம் மற்றும்

நாமக்கல் மாவட்ட வரலாற்று சிறப்புகளை விளக்கும் வகையில் இவ்வருங்காட்சியகம் உள்ளது.

சேலம் அஸ்தம்பட்டியில் அரசு அருங்காட்சியகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.5 கோடி (ரூபாய் ஐந்து கோடி) செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ளது.

**அரசு அருங்காட்சியகம், விருதுநகர்**

விருதுநகர் அரசு அருங்காட்சியகம் 2001–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தேர் சிற்பங்கள், தொல்பழங்காலக் கற்கருவிகள், இடைக்கால போர்க்கருவிகள் (வாள், வளரி), பதப்படுத்தப்பட்ட உயிரினங்கள், மக்களின் புழங்கு பொருட்கள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் விருதுநகர் அரசு அருங்காட்சியகத்திற்கு, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் புதிய கட்டடம் கட்ட 2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது. 11.02.2024 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் புதிய கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.5.60 கோடி (ரூபாய் ஐந்து கோடியே அறுபது இலட்சம்) செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**அரசு அருங்காட்சியகம், காஞ்சிபுரம்**

காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகம், 1999–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. தற்பொழுது, காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியகம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சொந்தமான வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. ஏகாம்பரநாத சுவாமி கோயிலுக்கு சொந்தமான புதிய கட்டடத்திற்கு அரசு அருங்காட்சியகத்தை மாற்றியமைக்க காட்சியமைப்புப் பணிகள் ரூ.2 கோடி (ரூபாய் இரண்டு கோடி) செலவில் நடைபெற்று வருகின்றன.

**அரசு அருங்காட்சியகம், நாகப்பட்டினம்**

நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகம் 1999–ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சாலை விரிவாக்கத்தின் காரணமாக அக்கட்டடத்தை மாற்றியமைக்கப்பட வேண்டியதைத் தொடர்ந்து இவ்வருங்காட்சியகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நூறாண்டு பழமையான, வருவாய் கோட்டாட்சியர் அலுவலக (ஆர்.டி.ஓ) பாரம்பரிய கட்டடத்தை சீரமைத்து, அதன் தரைத் தளத்தில் அருங்காட்சியகத்தை மாற்றியமைத்து மேம்படுத்தும் பணிகள் ரூ.1.40 கோடி (ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம்) செலவில் நடைபெற்று வருகின்றன.

**அரசு அருங்காட்சியகம், கடலூர்**

கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் 1989–ஆம் ஆண்டு வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் பழைய அலுவலகம் இயங்கி வந்த பாரம்பரிய கட்டடத்தின்

தரைத் தளத்திற்கு மாற்றப்பட்டு தற்பொழுது இயங்கி வருகிறது. இவ்வருங்காட்சியகத்தின் காட்சிக் கூடங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம்) செலவில் நடைபெற்று வருகின்றன.

**அரசு அருங்காட்சியகம், வேலூர்**

வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகம் 1985–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்பொழுது வேலூர் கோட்டையினுள் இந்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. சென்னைக்கு அடுத்தப்படியாக அதிக பார்வையாளர்கள் இவ்வருங்காட்சியகத்திற்கு வருகை புரிகின்றனர். காட்சிக் கூடங்களை மேம்படுத்தும் பணிகள் ரூ.1 கோடி (ரூபாய் ஒரு கோடி) செலவில் நடைபெற்று வருகின்றன.

**அரசு அருங்காட்சியகம், அரியலூர்**

அரியலூர் கள புதையுயிரிப் படிவ (Fossil) அருங்காட்சியகம் அரியலூர் மாவட்டம் வாரணவாசி கிராமத்தில் 2019–ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வருங்காட்சியகம் ஏழரை கோடி

ஆண்டுகளுக்கு முன்னர் உருவான களர் நிலப் பகுதியில் சுமார் 50 ஹெக்டேர் நிலப் பரப்பில், 5,500 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தில் புவியியல் காலவகைப்பாட்டின்படி காட்சியமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அரியலூர் மாவட்டத்தில் கிடைக்கப் பெறும் சுண்ணாம்புக் கல்லூழி தொன்மாக் காலத்துக்கு முற்பட்ட காலத்தைச் (Cretaceous period) சார்ந்த புதை படிவங்கள், தமிழகத்தில் கிடைக்கப் பெறும் கனிமங்கள் மற்றும் பாறைகள், கள்ளங்குறிச்சி சுரங்கப் பகுதியில் 1985–ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட டைனோசர் முட்டை புதை படிவம் ஆகியன காட்சியமைக்கப்பட்டுள்ளன.

**மாபெரும் சோழர் அருங்காட்சியகம், தஞ்சாவூர்**

2023–2024–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தஞ்சாவூரில் 'மாபெரும் சோழர் அருங்காட்சியகம்' அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தஞ்சாவூர்

பெரிய கோயில் அருகில் மருத்துவக் கல்லூரி சாலையில் 6.39 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க பணி ஆணை வழங்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன.

**காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரை**

மதுரையில் உள்ள காந்தி நினைவு அருங்காட்சியகம் அமைந்துள்ள கட்டடம் மதுரையை ஆட்சி செய்த இராணி மங்கம்மாள் அவர்களின் கோடைகால அரண்மனையாகும். இது 1670–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்தக் கட்டடத்தை பின்னர் வந்த நாயக்கர்கள், ஆற்காடு நவாபுகள் மற்றும் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியாளர்கள் பயன்படுத்தி வந்தனர். ஆங்கிலேயர்கள் காலத்தில் மாவட்ட ஆட்சியர்களின் வசிப்பிடமாக இருந்தது. 1955 ஆம் ஆண்டு 13 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும் இந்த அரண்மனையும் அனைத்திந்திய காந்தி நினைவு நிதி அறக்கட்டளைக்கு (All India Gandhi

Smarak Nidhi) காந்தி நினைவு அருங்காட்சியகம் அமைக்கும் நோக்கத்திற்காக தமிழ்நாடு அரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்த அருங்காட்சியகத்தின் புராதன கட்டடத்தினை சீரமைத்து காட்சியமைப்புகளை மேம்படுத்தி தரம் உயர்த்த ரூ.6 கோடி (ரூபாய் ஆறு கோடி) செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 2.5 வெளியீடுகள்

அருங்காட்சியக வெளியீடுகள் உலகப் புகழ்பெற்றவை. தொல்லியல், மானுடவியல், கலை, தாவரவியல், விலங்கியல், புவியியல், நாணயவியல், வேதியியப் பாதுகாப்பு போன்ற பல்வேறு நூல்கள் வெளியிடப்படுகின்றன. அருங்காட்சியக வெளியீடுகள் மிகவும் புகழ்வாய்ந்தவை. அவை ஆராய்ச்சி மாணவர்களுக்கு குறிப்புதவி நூல்களாகக் கருதப்படுகின்றன.

## 2.6. அருங்காட்சியக சேகரிப்புகள்

1878-ஆம் ஆண்டு இந்திய புதைபொருள் சட்டத்தின் மூலமாக அருங்காட்சியகத்திற்கு பூமிக்கு கீழே புதையலாக கிடைக்கும் புதைபொருள்கள் யாவும் பெறப்பட்டு வருகின்றன. இதுவரை, சென்னை அரசு அருங்காட்சியகத்தில் 71,410 அரும்பொருட்கள் சேகரிப்பில் உள்ளன. 23 மாவட்ட அருங்காட்சியகங்களில் 43,324 அரும்பொருட்கள் சேகரிப்பில் உள்ளன.

### 2.6.1. 2023-2024 ஆம் ஆண்டு சென்னை அரசு அருங்காட்சியக சேகரிப்புகள்

2023-2024 ஆம் ஆண்டு, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து புதைபொருள்களாகப் பெறப்பட்ட படிமங்கள், கற்சிற்பங்கள், நாணயங்கள் மற்றும் ஆபரணங்கள் ஆகியவை அருங்காட்சியகங்கள் துறையால் சேகரிக்கப்பட்டு உள்ளன.

- புதுக்கோட்டை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கி.பி. 14–17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பூவராகர், சோமாஸ்கந்தர், பார்வதி, அய்யனார், சந்திரசேகரர் மற்றும் விஷ்ணு படிமங்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு பெறப்பட்டு சேகரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், மைலம்பட்டி கிராமத்தில் இருந்து பெறப்பட்ட, கி.பி.18–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த 100 எண்ணிக்கை கொண்ட வெள்ளிக் காசுகள் மற்றும் ஆபரணங்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு பெறப்பட்டு சேகரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமாரமங்கலம் கிராமத்தில், புதைபொருளாகக் கிடைத்த இந்தோ–பிரிட்டிஷ் கால 2,133 வெள்ளி நாணயங்கள் சென்னை அரசு

அருங்காட்சியகத்திற்கு பெறப்பட்டு சேகரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

- இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், காட்டுப்பரமக்குடி கிராமத்தில் கிடைத்த சந்திரசேகரர், மணி, பீடம், படிமங்கள் புதுக்கோட்டை, பொன்னமராவதி வட்டம் ஏனாதி கிராமத்தில் கிடைத்த 16 பொன் நாணயங்கள், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், சுரையப்பட்டு கிராமத்தில் கிடைத்த 21 வெள்ளிக் காசுகள், புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், பேரையூர் கிராமத்தில் கிடைத்த நடராஜர் உள்ளிட்ட 22 படிமங்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு பெறப்பட்டு சேகரிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

**2.6.2. 2023–2024 ஆம் ஆண்டு மாவட்ட அரசு அருங்காட்சியக சேகரிப்புகள்**

- காஞ்சிபுரம் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் இருந்து பெறப்பட்ட கி.பி.16 மற்றும் 19 ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த வேணுகோபாலர், புத்தர், நடராஜர், விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி, அம்மன் மற்றும் கோயில் மணி ஆகிய புதை பொருள்கள் காஞ்சிபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

- புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், நீர்ப்பழனி கிராமத்தில் இருந்து பெறப்பட்ட கி.பி.1–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு மண்பானைகள், நான்கு முகங்கள் மற்றும் ஐந்து முகங்கள் கொண்ட உரோமானிய மண்விளக்கு மற்றும் இரண்டு மண்பானை மூடிகள் புதைபொருள்களாகப் பெறப்பட்டு, புதுக்கோட்டை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அத்திமுகம் கிராமத்தில் கி.பி.13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கற்சிற்பங்கள், பைரவர், சண்டிகேஸ்வரர், துர்க்கை சிலைகள் மற்றும்

கருங்கல்லால் ஆன பலகைவரி ஆகியன புதைபொருள்களாகப் பெறப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

- கன்னியாகுமரி மாவட்டம், தெரிசனம் தோப்பு கிராமத்திலிருந்து புதைபொருளாகப் பெறப்பட்ட தற்காலத்தைச் சேர்ந்த அம்மன் கற்சிலை மற்றும் சாஸ்தா கற்சிலை கன்னியாகுமரி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டத்தில் இருந்து புதைபொருளாகப் பெறப்பட்ட, ஆங்கிலேயர் காலத்து வட்டவடிவ கால் அணா மற்றும் அரை அணா நாணயங்கள் இராமநாதபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டையில் பெறப்பட்ட இரும்பு காலத்து சுடுமண்ணால்

செய்யப்பட்ட முதுமக்கள் தாழிகள் விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

### 2.6.3. சென்னையில் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட அரும்பொருட்கள்

- அருங்காட்சியகத்துறையில் புதைப்பொருளாகப் பெறப்பட்ட அரும்பொருட்களைத் தவிர பொதுமக்களே முன்வந்து தங்கள் வசம் இருக்கின்ற அரும்பொருட்களை மனமுவந்து நன்கொடையாக அளிக்கின்றனர். இது அருங்காட்சியக சேகரிப்பை மேலும் வளப்படுத்த பெரும் வாய்ப்பாக அமைகிறது. அந்த வகையில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஒரு பழங்கால ஓலைச்சுவடி, இரண்டு ஓவியங்கள் வேலைப்பாடு உள்ள மரமேசை ஆகியன 2023-2024 ஆம் ஆண்டு

பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக சேகரிக்கப்பட்டன.

### 2.6.4. மாவட்டங்களில் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட அரும்பொருட்கள்

- திருச்சி அரசு அருங்காட்சியகத்தில் தம்புரா இசைக்கருவி ஒன்றும், உறையுடன் கூடிய வாள் ஒன்றும் நன்கொடையாக பெறப்பட்டது.
- அரியலூர் அரசு அருங்காட்சியகத்தில் இரண்டு புதைபடிவங்களும் நன்கொடை மூலமாக சேகரிக்கப்பட்டன.
- இராமநாதபுரம் அரசு அருங்காட்சியகத்தில் நான்கு இந்தோ–பிரிட்டிஷ் கால செப்பு நாணயங்கள் நன்கொடையாக பெறப்பட்டன.
- கோயம்புத்தூர் அரசு அருங்காட்சியகத்தில் பிரிட்டிஷ் கால வெள்ளி நாணயம் ஒன்று நன்கொடையாக பெறப்பட்டது.

- சேலம் அரசு அருங்காட்சியகத்தில் இராட்டை ஒன்று நன்கொடையாக பெறப்பட்டது.
- பழனி (திண்டுக்கல்) அரசு அருங்காட்சியகத்தில் அயல்நாட்டு பணத்தாள்கள் நன்கொடையாக பெறப்பட்டன.
- கரூர் அருங்காட்சியகத்தில் இரும்புப் படி ஒன்று அன்பளிப்பாக பெறப்பட்டு சேகரிக்கப்பட்டது.
- திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் மரமேசை ஒன்றும், இரண்டு பழங்காலக் கடிகாரங்கள் மற்றும் தானியக் குதிர் ஒன்றும் பொது மக்களிடமிருந்து அன்பளிப்புகளாக பெறப்பட்டன.
- திருவாரூர் அரசு அருங்காட்சியகத்தில் அமீரக பணத்தாள் ஒன்று அன்பளிப்பாக பெறப்பட்டது.
- நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகத்தில் சுடுமண் ஆமை ஒன்றும் நன்கொடையாக பெறப்பட்டு சேகரிக்கப்பட்டது.

- ஈரோடு அரசு அருங்காட்சியகத்தில் பழங்காலக் காசுகள், சுடுமண் சாடிகள் அன்பளிப்பாகப் பெறப்பட்டன.
- கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் நான்கு ஓவியங்கள் பொதுமக்களிடமிருந்து அன்பளிப்புகளாக பெறப்பட்டு, பொது மக்கள் பார்வைக்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## 2.7. கல்விப் பணிகள்

பள்ளி, கல்லூரி மாணவர்களின் கல்வி நலனிற்காக, பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, மாணவர் சமுதாயத்தின் நலனுக்காக கருத்தரங்கு, பயிற்சிப்பட்டறை, விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. கலை மற்றும் அறிவியலைப் படிக்கும் கல்லூரி மாணவர்களுக்கு அருங்காட்சியகங்கள் துறை உள்ளுறைப் (Internship) பயிற்சி அளிக்கிறது. சென்னை அரசு அருங்காட்சியகம், 2023–2024 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள 21 கல்லூரிகளிலிருந்து 293 மாணவர்களுக்கு

உள்விளக்கப் பயிற்சி அளித்தது. மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் மூலமாக 51 கல்லூரிகளிலிருந்து 1,816 மாணவர்களுக்கு உள்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 2.7.1. சென்னையில் கல்விப் பணிகள் மற்றும் கண்காட்சிகள்

- சர்வதேச அருங்காட்சியகங்கள் தினத்தினை முன்னிட்டு, 18.05.2023 அன்று 'அருங்காட்சியகங்களின் நிலைத்தன்மை குறித்த ஆராய்ச்சியின் பங்கு' என்ற தலைப்பில் முனைவர் பெஸ்ஸி செசில் அவர்களால் சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்பட்டது.

- சென்னை அரசு அருங்காட்சியகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, 14.08.2023 அன்று சென்னை பச்சையப்பன் கல்லூரியின் வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் இரா.சரவணன் "முத்தமிழறிஞர் கலைஞரின்

பன்முக ஆளுமை" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு "முத்தமிழறிஞர் கலைஞர் பெற்ற நினைவுப் பரிசுகள் மற்றும் கலைஞர் அவர்களால் ஒழிக்கப்பட்ட மனிதனை மனிதனே இழுக்கும் கைரிக்சா" என்ற கண்காட்சி 05.09.2023 அன்று மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- 11.01.2024 அன்று "சோழர்கால கட்டடக்கலையில் வியக்க வைக்கும் தொழில் நுட்பங்கள்" என்கின்ற தலைப்பில் கட்டட கலை நிபுணர், பொறியாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகைப்படக் கண்காட்சி,

ஓவியக் கண்காட்சி 06.02.2024 அன்று மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

- 15.02.2024 அன்று, அருங்காட்சியகங்கள் துறையும் மற்றும் சர்வதேச பெண்கள் சங்கமும் இணைந்து நடத்திய அறக்கட்டளை சொற்பொழிவில், மேனாள் மேதகு மேற்குவங்க ஆளுநர் திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள், "சென்னையின் நெருக்கடி கால சூழலில் தன்னாட்சி கொண்ட ஐந்து பெண்கள்" (**Five Women in Chennai Autonomy Amid Tension**) என்ற தலைப்பில் அருங்காட்சியகக் கலையரங்கத்தில் உரையாற்றினார்.

### 2.7.2. மாவட்ட அருங்காட்சியகங்களில் கல்விப்பணிகள்

மாவட்ட அருங்காட்சியகங்களில் உலக பாரம்பரிய தினம், பன்னாட்டு அருங்காட்சியக தினம், உலக சுற்றுலா தினம், யோகா தினம், சுதந்திர தினம், தேசிய அறிவியல் தினம், உலக சுற்றுச் சூழல் தினம், குழந்தைகள் தினம், தபால் தலை தினம் போன்ற சிறப்பு தினங்கள் கொண்டாடப்படுகின்றன. பார்வையாளர்களைக் கவரும் வகையில் போட்டிகள், சிறப்புக் கண்காட்சிகள், பாரம்பரிய நடை பயிற்சிகள், பட்டறைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மேலும், கல்வெட்டுகள் மற்றும் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்தல் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவற்றுள் சில நிகழ்ச்சிகள் பின்வருமாறு:—

- இந்தியாவிலேயே முதன் முதலாக ஆங்கிலேயர்களை எதிர்த்து 1806–ஜூலை 10–இல் நடைபெற்ற சிப்பாய் எழுச்சியின் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் வேலூர் அரசு அருங்காட்சியகத்தில், ஜூலை மாதத்தில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கடந்த ஆண்டில் 10.07.2023 முதல் 31.07.2023 வரை, "வேலூர் சிப்பாய் புரட்சி" என்ற தலைப்பில் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், 24.08.2023 அன்று, "தமிழ்ப் பண்பாடு மற்றும் பரப்புரை திட்டம்–மாபெரும் தமிழ் கனவு"–என்ற தலைப்பில் கீழக்கரை தாசீம் பீவி மகளிர் கலைக் கல்லூரியில், கண்காட்சி நடத்தப்பட்டது.
- திருநெல்வேலி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் 05.09.2023 அன்று, நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டு, ஆங்கிலேய

ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கப்பல் ஓட்டி, சிறையில் அடைக்கப்பட்ட செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கல்லூரி மாணவர்களுக்கு ஓவியப் போட்டி மற்றும் புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

- புதுக்கோட்டை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், 21.11.2023 அன்று "புதுக்கோட்டை மாவட்ட கலைச் சின்னங்கள்" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
- திருவாரூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், 19.12.2023 அன்று "இசைக் கருவிகள் புகைப்படக் கண்காட்சி" நடைபெற்றது.
- பழனி (திண்டுக்கல்) அரசு அருங்காட்சியகத்தில், 22.02.2024 அன்று முதுகலை வரலாற்றுத் துறை மாணவிகளுக்கு "தமிழ் வளர்ச்சி" பற்றி கருத்தரங்கம் நடைபெற்றது.

### 2.7.3 மாவட்ட அருங்காட்சியகங்களில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகள்

விருதுநகர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு 25.08.2023 மற்றும் 26.08.2023 ஆகிய நாட்களில் சிறப்பு புகைப்படக் கண்காட்சி மற்றும் தமிழ் பிராமி எழுத்துப் பயிற்சி நடத்தப்பட்டன.

- திருநெல்வேலி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், 28.09.2023 அன்று பள்ளி மாணாக்கர்களுக்கு குறளோவியம் கண்காட்சி நடத்தப்பட்டது.
- காஞ்சிபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், 12.10.2023 அன்று "கலைஞர் 100" என்ற தலைப்பில் நாணயக் கண்காட்சி நடைபெற்றது.
- கன்னியாகுமரி மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் 18.10.2023 அன்று,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவப்படம் வரைதல் போட்டி நடத்தப்பட்டு அனைவருக்கும் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டன.

- கடலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் 31.10.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது.
- வேலூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் 31.10.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு அழகிய கையெழுத்துப் போட்டி நடைபெற்றது.
- திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு அருங்காட்சியகத்தில் 05.01.2024 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு பள்ளி மாணாக்கர்களிடையே வினாடி வினா போட்டி நடத்தப்பட்டது.

- கரூர் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, 25.01.2024 அன்று பள்ளி மாணாக்கர்களிடையே கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டது.
- இராமநாதபுரம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில், "மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் ஒரு சகாப்தம்" என்ற தலைப்பில் 03.01.2024 முதல் 29.01.2024 முடிய புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது.
- சிவகங்கை மாவட்ட அரசு அருங்காட்சியகத்தில் "கலைஞரின் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு வாசகங்கள் எழுதுதல்" போட்டி நடத்தப்பட்டு, சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 2.8 நிறைவுரை

அருங்காட்சியகம் பாரம்பரியத்தைப் பற்றியும் கடந்த காலத்தைப் பற்றியும் விவரித்தாலும், இக்கால நவீன தொழில்நுட்பக் கூறுகளான டிஜிட்டல் தொழில்நுட்பம், மெய்நிகர் மாதிரி (Augmented Reality) ஆகியவை மூலம் இளைய சமுதாயத்தைக் கவரும் வகையில் புதிய முயற்சிகள் செய்து வருகிறது. மெய்நிகர் மாதிரிகளைக் (Virtual Reality) கொண்டு ஊடாடும் காட்சி அமைப்பு மற்றும் தொடுதிரை வசதிகள் பார்வையாளர்களுக்கு சிறந்த காட்சி அனுபவத்தைத் தருவதோடு, அருங்காட்சியகத்தில் உள்ள பொருண்மைகளை எளிதில் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் கொண்டு சேர்க்கும் அரிய பணிகளை செய்து வருகிறது.

**மு.பெ.சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காந்தி ஜெயந்தி தினத்தன்று சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்தார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கண்காட்சியை 05-09-2023 அன்று தொடங்கி வைத்து டாக்டர் கலைஞர் அவர்களால் ஒழிக்கப்பட்ட மனிதனே மனிதனை இழுக்கும் கைரிக்சாவை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் புதுப்பிக்கப்பட்ட கலையரங்கத்தை 06-02-2024 அன்று தொடங்கி வைத்தார்.



புத்தாக்கம் செய்யப்பட்ட சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தின் வெளிப்புற ஒளி அமைப்பு தோற்றம்



புத்தாக்கம் செய்யப்பட்ட சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தின் உட்புற ஒளி அமைப்பு தோற்றம்



புத்தாக்கம் செய்யப்பட்ட சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகக் கலையரங்கத்தின் உட்புறத் தோற்றம்



06-02-2024 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட. புதுப்பிக்கப்பட்ட சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக தேசிய கலைக் கூடத்தின் வெளிப்புற ஒளி அமைப்புத் தோற்றம்.



புதுப்பிக்கப்பட்ட தேசிய கலைக் கூடத்தின் உட்புறத்தோற்றம்.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பாரம்பரிய உணவகக் கட்டடத்தை திறந்து வைத்தல் – நாள் 06.02.2024.



புத்தாக்கம் செய்யப்பட்ட பாரம்பரிய உணவகக் கட்டடத்தின்
உட்புறத் தோற்றம் – அரசு அருங்காட்சியகம், சென்னை.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களுடன் 30-06-2023 அன்று சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் புதிய நிர்வாக கட்டடத்தை பார்வையிட்டார்



சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ள கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருவாலங்காடு நடராஜர் படிமம்.



சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ள கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த திருவெண்காடு அர்த்தநாரீஸ்வரர் படிமம்.



ஆதிச்சநல்லூர் அரும்பொருட்கள் காட்சிக்கூடத்தின் ஒரு பகுதி
அரசு அருங்காட்சியகம், சென்னை.



1 9 0 4 – ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முதலாக மேற்கொள்ளப்பட்ட ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்த 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தாய் தெய்வ படிமம் மற்றும் தங்க நெற்றி பட்டை,அரசு அருங்காட்சியகம் சென்னை



கல் இல்லத்திற்கு மாற்றப்பட்ட உதகமண்டலம் அரசு அருங்காட்சியகம்



அமராவதி சிற்பம், கி.பி. ஒன்றாம் நூற்றாண்டு – அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.



கண்ணாடியுடன் மங்கை – இராஜா இரவி வர்மாவின் எண்ணெய் வண்ண ஓவியம்
அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.



டைனோசரின் முட்டைப் படிவம் – புதையுயிரிப் படிவ அருங்காட்சியகம், அரியலூர்– ஜுராசிக் காலம் 140 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டது.



திப்பு சுல்தான் பயன்படுத்திய பீரங்கி
அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.



பல்வேறு வகையான கோடரிகள், தஞ்சை ஆயுத சாலை ஆயுதங்கள்,
அரசு அருங்காட்சியகம், எழும்பூர், சென்னை.



ஜல்லிக்கட்டு வீரக்கல், பெத்தநாயக்கன் பாளையம், சேலம்,
கி.பி. 16–ஆம் நூற்றாண்டு, அரசு அருங்காட்சியகம், சேலம்



பல்வேறு வகையான வளரிகள், அரசு அருங்காட்சியகம், சிவகங்கை



திருஞானசம்பந்தர் உலோக சிலை,14–ஆம் நூற்றாண்டு,குடவாசல்,திருவாரூர் மாவட்டம்



மகாவீரர், 10–ஆம் நூற்றாண்டு, முள்ளிகருப்பூர், திருச்சிராப்பள்ளி



ஸ்ரீநிவாசர் கற்சிலை, 9–ஆம் நூற்றாண்டு, அரசு அருங்காட்சியகம் கன்னியாகுமரி



நடுகல், 16–ஆம் நூற்றாண்டு, இளவேளங்கால், அரசு அருங்காட்சியகம், திருநெல்வேலி.



வீரக்கல், 13–ஆம் நூற்றாண்டு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்,
அரசு அருங்காட்சியகம், சேலம்

விரைவு துலங்கள் குறியீடு (கியூ ஆர் குறியீடு)
(QR Code)

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை – 600 001.